விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 290 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 18 வெள்ளிக்கிழமை (04.10.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## நிவாரணங்களை வழங்க அரசு திட்டமிட்டுள்ளது

### ஐ.எம்.எப் அதிகாரிகளிடம் ஜனாதிபதி



15

மதுபான அனுமதிப்பத்திரங்களைப் பெற்ற

## அரசியல்வாதிகளின் பெயரை உடனடியாக வெளியிடுங்கள்

### ஜனாதிபதியிடம் சுமந்திரன் நேரில் வலியுறுத்து

(கொழும்பு)

மதுபானசாலை உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட அரசியல்வாதிகள் தொடர்பான தகவல்களை உடனடியாக வெளியிடுமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் சுமந்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.


நேற்று மாலை சுமந்திரனுக்கும் ஜனாதிபதிக்குமிடையிலான விசேட சந்திப்பொன்று நிகழ்ந்தது. அரை மணி நேரத்திற்கு அதிகமாக நிகழ்ந்த இந்தச் சந்திப்பில் பல்வேறுபட்ட விடயங்கள் குறித்துப் பேசப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு 02

# ஜெய்சங்கர் இன்று இலங்கை விஜயம்

- ஜனாதிபதி, பிரதமர், வெளிவிவகார அமைச்சருடன் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளார்.
- தமிழ்க் கட்சிகளுடனும் ஜெய்சங்கர் சந்திப்புக்களை நடத்துவார்.
- இனப் பிரச்சினையைத் தீர்க்குமாறு அநுரவிடம் வலியுறுத்தலாம்.
- டில்லி வருமாறு மோடியின் அழைப்பை அநுரவிடம் கையளிக்கவுள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)



## திங்கட்கிழமை பொதுமக்கள் தினம்

### வட மாகாண ஆளுநர் செயலகம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

திங்கட்கிழமை பொதுமக்கள் தினமாக வட மாகாண ஆளுநர் செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆளுநர் அவர்களுடன் பொதுமக்கள் தங்களுடைய பிரச்சினைகளை நேரடி 15

யாழில் கைபேசி விளையாட்டுக்கு


## அடிமையான மாணவன் விபரீத முடிவெடுத்து மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழில் கைபேசி விளையாட்டுக்கு அடிமையான மாணவன் ஒருவன் விபரீத முடிவெடுத்து நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் யாழ்ப்பாணம் பெரியபுலம் மகா வித்தியாலயத்தில் தரம் 11 இல் கல்வி கற்கும் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த தவசுதன் சாருஜன் (வயது-15) என்ற மாணவனே உயிரிழந்தவராவார். 15

## மக்கள் எதிர்பார்ப்புகள் அதிகம் எதிர்வரும் காலம் சவாலானது



### ஜனாதிபதியிடம் ஐ.நா இணைப்பாளர்

(கொழும்பு)

மக்கள் எதிர்பார்ப்புகள் அதிகளவில் காணப்படுவதால் எதிர்வரும் காலம் தங்களுக்குச் சவாலாக அமையும் என ஜனாதிபதியிடம் ஐ.நா இணைப்பாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் இலங் 15

மத்திய வங்கி ஆளுநர்களின்

## ஓய்வூதியம் இரத்து

### வர்த்தமானி வெளியானது

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்களின் ஓய்வூதியத்தை இரத்துச் செய்யும் வர்த்தமானியை மத்திய வங்கி வெளியிட்டுள்ளது.

ஆளுநராக நியமிக்கப்பட்ட ஒருவருக்கு ஓய்வூதியக் கொடுப்பனவுகள் நிறுத்தப்படும் என மத்திய 15

யாழ்ப்பாணத்தில்

## தனியார் விடுதியில் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் தங்கியிருந்த 15

## விசுவமடுவில் பேருந்துடன் மோ.சைக்கிள் மோதி விபத்து

### குடும்பஸ்தர் உயிரிழப்பு

(தருமபுரம்)

பேருந்து ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்தானது முல்லைத்தீவு விசுவமடு - கண்ணகிநகர்ப் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கண்ணகிநகர்ப் பகுதியினைச் சேர்ந்த 43 வயதுடைய குமாரசாமிபுரம் பகுதி 15

பாராளுமன்றத் தேர்தல்

## வேட்புமனுத் தாக்கல் இன்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் பணி இன்று ஆரம்பமாகவுள்ளது.

இதன்படி எதிர்வரும் 11ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை வேட்புமனுக்களைச் சமர்ப்பிக்க முடியும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று (04.10.2024) இசுறுபாய பத்தரமுல்லையில் அமைந்துள்ள கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் கேட்போர்கூடத்தில் நடைபெறுகின்ற 2024ஆம் ஆண்டிற்கான "குருபிரதீபா பிரபா" விருதினைப் பெற்றுக் கொள்ளும் எமது பாடசாலையின் முதல்வர் அவர்களையும் ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துவதில் பெரு மகிழ்வடைகின்றோம்.



திருமதி கவின்ஜா நவஜீவா (அதிபர்)



திருமதி நிசாந்தி கயூரன்



செல்வி கிறிஸ்ரின் வேர்ஜினி கிறிஸ்தோபர்



திருமதி சிந்துஜா சுபாகர்

Best Wishes!

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

(C-1335)


# யாழ்ப்பாணத்துப் பெண் கனடாவில் படுகொலை

(காபரோ)

கனடாவில் யாழ்ப் பாணப் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டு ள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இருநாட்களுக்கு முன் காபரோ Ellesmere and Orton Park பகுதி யில் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த 54 வயதுடைய துஷி லக்ஷ் மணன் என்ற பெண் கொல்லப்பட்டுள்ளார்.

கொலைச் சம்பவத் துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் மற்றுமொரு தமிழர் கைது செய்யப்பட் டுள்ளார்.

50 வயதான ராகுலன் லக்ஷ்மணன் என்பவரே கைது செய்யப்பட்டு ள்ளார். சந்தேக நபர் உயிரிழந்த பெண்ணின் சகோதரர் எனத் தெரிவிக் கப்படுகிறது.

கொலைக்கான காரணம் வெளியாகவி ல்லை. கொலை தொடர் பில் மேலதிக விசார ணைகளை பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (ம-7)

## அரசியல்...

பின்பான அரசியல் சூழ்நிலைகள், எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தல் என்பன தொடர்பாக நீண்ட கலந்து ரையாடல் இடம்பெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் வெற் றிக்குப் பின்னரான, புதிய அரசியல மைப்பு தயாரிப்பு தொடர்பாகவும், அவர்களது தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டபடி 2015 - 2019 இற்கு இடைப்பட்ட காலத்தில் முன்னெடுக் கப்பட்ட தேர்தல் வரைபினை அமுல் படுத்துதல் தொடர்பாகவும், இச் செயற் பாடுகளில் தமிழர் தரப்பு பிரதிநிதித் துவம் அவசியம் என்பதனையும் சுமந் திரன் வலியுறுத்தியிருந்தார்.

மேலும் ஊழல் ஒழிப்பு விவகாரங் கள் தொடர்பாக எடுக்கப்படும் நடவ டிக்கைகள் மற்றும் அதற்கான சட்ட ஏற்பாடுகள் சம்பந்தமாகவும் ஜனாதி பதிக்கு தனது ஒத்துழைப்பினை வழங்குவதாகத் தெரிவித்திருந்தார்.

இந்த விடயத்தில் முறைகேடாக பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது சிபாரிசின் பேரில் கொடுத்த மதுபான சாலை அனுமதிப் பத்திரங்கள் தொடர் பான பெயர்ப்பட்டியல் வெளியிடப்படு வதில் தாமதம் ஏற்படுவது மக்கள் மத்தியில் புதிய ஆட்சியாளர்களை குறித்ததான சந்தேகத்தினையும் ஏற்ப டுத்துவதனை அவர் சுட்டிக்காட்டியி ருந்ததோடு உடனடியாக அவ் அரசி யல்வாதிகளின் பெயர்ப் பட்டியலினை வெளியிடுமாறும் கோரிக்கையினை முன்வைத்திருந்தார். (ம-7)

## ஜெய்சங்கர்...

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்ரமணியம் ஜெய்சங்கர் இன்று இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொள்ளவு ள்ளார்.

இந்த விஜயத்தின் போது ஜெய் சங்கர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

மேலும், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தை சந்தித்து கலந்து ரையாடவுள்ளார்.

மேலும், இந்த விஜயத்தின் போது, டில்லி வருமாறு இந்தியப் பிரதமர் மோடியின் அழை ப்பை, ஜனாதிபதி அநுரவிடம் இந் திய வெளிவிவ கார அமைச்சர் கையளிக்கவுள் ளார்.

அத்துடன் இனப்பிரச்சினை யைத் தீர்க்கு மாறு அநுரவிடம் வலியுறுத்தலாம்.

அதேவேளை, தமிழ்க் கட்சிக ளுட னும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சந் திப்பு நடத்துவார் என எதிர்பார்க் கப்படுகின்றது. (ம-7)


UNICORN
FACILITATORS (PVT) LTD.

## வங்கிக் கடன்கள் பெறுவதில் சிரமமா?

பெற்ற வங்கிக்கடன்களை சரியான முறையில் மீள் அளிப்பதில் சிரமமா?

- வங்கிக்கு அடமானமாகக் கொடுத்த உங்கள் பெறுமதி மிக்க சொத்துக்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமா?
- பெற்ற வங்கிக் கடன்களை உங்கள் பண வரவிற்கு ஏற்றவாறு மீள் அமைப்பதன் மூலம் உங்கள் பெறுமதியான சொத்துக்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமா?
- ஏற்றுமதி, இறக்குமதி வாணிபத்திற்கான பயிற்சி நெறிகள் zoom மூலம் வழங்கப்படும்.

எம்மை அழையுங்கள்

077 768 7821, 077 311 1361
Info@unicornmigrate.com

அனுபவம் மிக்க ஓய்வுநிலை வங்கி உயர் அதிகாரிகள்

(2203)



## இந்து இளைஞர்கள், யுவதிகளுக்கு அன்பான அவசர அழைப்பு

இலங்கைச் சிவசேனையுடன் இணைந்து சிவபூமியாம் ஈழத்தில் சிவத்தொண்டு செய்வதற்கும், நாவலர் வழிநின்று சைவத்தின் காவலர்களாக விளங்குவதற்கும் ஆர்வமுள்ள அனைத்து இந்து இளைஞர், யுவதிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த ஒன்று திரட்டும் பணி காலத்தின் கட்டாய தேவையாகவுள்ளதை அனைவரும் உணர்வீர்கள்.

எனவே எதிர்வரும் 05.10.2024 சனிக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துசமயப் பேரவை மண்டபத்தில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் ஒன்று கூடுமாறு சைவத்தின் பெயரால் அழைக்கின்றோம்.

இலங்கை சிவசேனை
077 960 3001

(C-1336)



## பணிப்பெண் தேவை

யாழ்.நகரில் வீட்டில் தங்கி இருந்து சிறிய குடும்பம் ஒன்றைப் பராமரிக்க 45 வயதிற்குட்பட்ட பணிப்பெண் ஒருவர் தேவை.

077 483 7415

(2201)



## பணியாளர் தேவை

கணினி பழகவிரும்புபவர்கள், அனுபவமுள்ள விற்பனைப் பிரதிநிதிகள், கணக்கு லிகிதர்கள், உதவியாளர்கள் தேவை.

076 315 6470

(C-1333)



## சதாபொன்ஸ் கல்வி நிலையம்

(ஒழுக்கம் சார் கல்வி)
மாலிசந்தி - அல்வாய்

2024 O/L மீட்டல் வகுப்புக்கள்
ஆரம்பம் : 05.10.2024 சனிக்கிழமை
காலை 8.00 மணிக்கு
அனுமதிகள் இன்று முதல்

077 309 5176, 076 126 0105

(C-1332)



## நம்பினால் நம்புங்கள்

அதிசயம் ஆனால் உண்மை உங்கள் எதிர்கால வாழ்க்கை துல்லியமாக (காண்டம்) கணித்துத் தரப்படும்.ஜனன ஜாதகம் எழுதித் தரப்படும்.

காயத்திரி திருமண சேவை
கன்னாதிட்டி சிவன் கோயில் முன்பாக ரூபி விலாஸ்
075 353 1367, 077 844 9861

(2200)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் பழிவாங்கல்களுக்கு இனி இடமில்லை - ஜனாதிபதி



(கொழும்பு)

**குடிமக்களுக்காகப் பாடுபடும் அரச அதிகாரிகள் அரசியல் பழிவாங்கல்களுக்கு முகம் கொடுக்கும் நிலை இதுவரை காலமும் இருந்தபோதும் அந்த சம்பிரதாயம் இனிமேலும் நடக்காது என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

விவசாயம், காணி, கால்நடை, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சராக நேற்றுக் காலை கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் அமைச்சின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிராமிய வறுமையை ஒழிப்பதற்காக விவசாய அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள பங்களிப்பு மகத்தானது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் புதிய அரசியல் சம்பிரதாயம் மற்றும் பழைய அரசியல் கலாசாரத்திற்கு எதிரான எதிர்ப்பு, பிரஜைகள் எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சினைகள், அரச சேவையின் செயற்பாடு தொடர்பான பிரஜைகளின் அதிருப்தி போன்றன தாக்கம் செலுத்தியதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டினார்.

எனவே வினைத்திறன் மிக்க மக்கள்நல அரச சேவையை உருவாக்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாக தெரிவித்த ஜனாதிபதி, பொருளாதார வீழ்ச்சிக்குப் பின்னால் மோசடி மற்றும் ஊழல் இருப்பதாக மக்கள் நம்புவதாகவும் அதனை தடுப்பதற்காகவே இம்முறை மக்கள் ஆணை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அரச கட்டமைப்பு முழுவதும் பரவியுள்ள பாரிய மோசடிகள் மற்றும் ஊழலை தடுத்து நிறுத்துவதற்கு மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை காப்பாற்றுவதாகவும் அரச ஊழியர்கள் தமது பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமெனவும் அரச ஊழியர்களிடம் அவர் கேட்டுக் கொண்டார்.

பிரஜைகளை திருப்திப்படுத்தும் வகையில் வினைத்திறன் மற்றும் செயற்திறன் மிக்க அரச சேவையை உருவாக்க தற்போதைய அரச உத்தியோகத்தரின் அர்ப்பணிப்பு அவசியமானது.

அரச சேவையில் இதுவரை இடம்பெற்று வந்த அரசியல் பழிவாங்கல், இடமாற்றம், அரச சேவையில் பதவி உயர்வு வழங்காமை போன்ற செயற்பாடுகள் தமது அரசாங்கத்தின் கீழ் இடம்பெறாது என வலியுறுத்திய ஜனாதிபதி, மக்களை திருப்திபடுத்தும் வினைத்திறன்மிக்க அரச சேவையை உருவாக்குவதற்கு அரச உத்தியோகத்தர்கள் செயற்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

எதிர்வரும் நாற்பது நாட்கள் நிலைமாற்ற காலமாகும். அந்த காலப்பகுதியில் அரச சேவையை வீழ்ச்சியடையாமல் பேணுவதற்கு அரச உத்தியோகத்தர் பாடுபட வேண்டும்.

அடுத்த பொதுத் தேர்தலின் பின்னர் இந்த அமைச்சுக்களுக்கு புதிய அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள்.

முன்பிருந்த அரச தலைவர்கள், அரச அதிகாரிகளை ஊடகங்களுக்கு முன்பாக கேள்வி எழுப்பியது போன்று தான் ஊடகங்களுக்கு முன்னால் அரச அதிகாரிகளை கேள்வி கேட்கப் போவதில்லை. இவ்வாறான ஊடகக் கண்காட்சிகளை தான் ஏற்கவில்லை.

அரச ஊழியரின் கண்ணியத்தைப் பாதுகாத்து குடிமக்கள் திருப்தியடையும் அரச சேவையை உருவாக்க தான் எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார். (நி)

## அதிகரிக்கும் பணமோசடிகள்! எச்சரிக்கும் பொலிஸார்!

(கொழும்பு)


இணையத்தினூடாக இடம்பெறும் பண மோசடிகள் அதிகம் பதிவாகுவதாக பொலிஸார் மக்களை எச்சரித்துள்ளனர்.

எனவே வங்கி வாடிக்கையாளர்கள் தங்களின் தற்காலிக கடவுச்சொற்கள் (OTP) அல்லது வங்கி வழங்கிய கடவுச்சொற்களை யாருடனும் பகிர்ந்து கொள்ள வேண்டாம் என்றும் விழிப்புடன் செயற்படுமாறும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

ஒன்லைன் கொடுக்கல் வாங்கல்களின் போதே இவ்வாறான மோசடிகள் இடம்பெறுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

பிரபலமான வர்த்தகநாமங்கள் மற்றும் சேவைகள் என்ற போர்வையில் தள்ளுபடிகள், பரிசுகள், அதிர்ஷ்ட சீட்டிழுப்புக்கள் போன்றவற்றை வழங்குவதாக காண்பித்து, போலியான இணையப் பக்கங்களுக்கு உங்களை வழிநடத்திச் செல்கின்ற போலியான சமூக ஊடக விளம்பரங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## ஓய்வை அறிவித்தார் மகிந்த யாப்பா



(கொழும்பு)

அரசியலில் தாம் மிகவும் ஏமாற்றமடைந்துள்ளதாகவும் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடப்போதில்லை என முன்னாள் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன அறிவித்துள்ளார். தென்னிலங்கைப் பத்திரிகை ஒன்றுக்கு நேற்று முன்தினம் வழங்கிய விசேட நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்தார். (நி)

## இலங்கை-இஸ்ரேல் விமான சேவைகள் ரத்து

(ஜெருசலேம்)

இலங்கை - இஸ்ரேலுக்கான விமானப் பயணங்கள் இரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி வரையில் இந்த விமான போக்குவரத்து இரத்து செய்யப்படுவதாக இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமால் பண்டார அறிவித்துள்ளார்.

ஈரான் படையினர் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வரும் நிலையில் டெல் அவிவ் விமான நிலையத்தின் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னதாக இஸ்ரேலுக்கு பயணங்களை மேற்கொள்வதற்காக விமான பயணங்களை திட்டமிட்டு உள்ளவர்கள் தங்களது பயணங்களை மீள திட்டமிட்டுக் கொள்ளுமாறு தூதரகம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. (நி)

## இலங்கை தூதரகத்தை முற்றுகையிட்டு தமிழகத்தில் போராட்டம்

(சென்னை)

தமிழக மீனவர்கள் மீது இலங்கை அரசாங்கம் அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விடுவதாகத் தெரிவித்து பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக எதிர்வரும் 8 ஆம் திகதி இலங்கை தூதரகத்தை முற்றுகையிட்டு போராட்டமொன்று நடத்தப்படவுள்ளது.

இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ள தமிழ் நாட்டின் மீனவ அமைப்புக்களுக்கும் குறித்த கட்சி சார்பாக அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வங்கக் கடலில் மீன்பிடிக்க செல்லும் தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை தொடர்ந்து தாக்கி வருவதாலும் அவர்களுடைய உடைமைகளை சேதப்படுத்துவது மற்றும் கைது செய்து சித்திரவதை செய்வது போன்ற அத்துமீறலில் ஈடுபட்டு வருவது நாளுக்கு நாள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மீன்பிடிக்கும் உரிமையை மதிக்க வேண்டும் எனவும் ஆனால் தமிழ்நாட்டில் உள்ள மீனவர்களை இலங்கை கடற்படையினர் மதிக்காமல் தொடர்ந்து அத்துமீறலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறான சம்பவங்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையிலும் தமிழ்நாட்டு மீனவர்களின் உரிமையைப் பாதுகாக்கும் வகையிலுமே இந்த முற்றுகை போராட்டத்தை நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் பா.ம.க.தெரிவித்துள்ளது. (நி)

## கொள்ளையடித்த ராஜபக்ஷக்கள்; நிரூபிக்குமாறு நாமல் சவால்

(கொழும்பு)

ராஜபக்ஷ ஆட்சியின் போது, பொது நிதியை கொள்ளையடித்ததாகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டை நிரூபித்துக் காட்டுமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிற்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சவால் விடுத்துள்ளார்.

பொது நிதிகள் கொள்ளையிடப்பட்டு உகண்டா மற்றும் சீஷெல்ஸ் உட்பட பல்வேறு நாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்த கூற்றுக்களின் காணொளி காட்சிகளை தனது எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ இது குறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது "உகண்டா மற்றும் பல்வேறு நாடுகளில் பில்லியன் கணக்கான டொலர்களை நாங்கள் பதுக்கி வைத்துள்ளோம் என்று ஜனாதிபதியும் அவரது குழுவும் பல ஆண்டுகளாகக் குற்றம் சாட்டி வருகின்றனர்.

ஜனாதிபதி தனது குற்றச்சாட்டுகளை நிரூபிக்க வேண்டிய நேரம் இதுவாகும்" இவ்வாறு நாமல் ராஜபக்ஷ பதிவிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## தேசிய மட்ட பளுதூக்கல் போட்டி

# இரு பதக்கங்களை வென்ற பாஷையூர் சென். அன்ரனீஸ் றோ.க ம.வி



அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான தேசிய மட்ட பளுதூக்கல் போட்டியில் யா/ பாஷையூர் சென்.அன்ரனீஸ் றோ.க.மகா வித்தியாலயத்திற்கு இரு பதக்கங்கள் கிடைத்துள்ளன.

குறித்த போட்டிகள் அண்மையில் பொலநறுவையில் இடம் பெற்றன.

இதில் 20 வயதிற்குட்பட்ட பெண் களுக்கான 71 கிலோ எடைப்பிரிவில் செல்வி எ.சறோமி -வெண்கலப் பதக்கமும் 45கிலோ எடைப் பிரிவில் என்.ஆன்மேரி- வெண்கலப்பதக் கமும் பெற்றுள்ளதுடன் 17 வயதுக் குட்பட்ட பெண்களுக்கான 45கிலோ எடைப்பிரிவில் எ.அகிலா 4ஆம் இடத்தினைப் பெற்றுள்ளமை குறிப் பிடத்தக்கது. (6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 140 | 140 | 200 | 100-150 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 165 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 280 | 200-250 | 400 |
| தக்காளி | 300 | 300 | 280 | 200 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 280 | 200 | 150-200 | 200 |
| கோவா | 230 | 300 | 280 | 200 | 200 |
| கரட் | 200 | 200 | 250 | 150 | 200 |
| பூசணி | 80 | 60 | 80 | 50 | 100 |
| புடோல் | 80 | 130 | 100 | 150 | 200 |
| வாழைக்காய் | 200 | 200 | 180 | 200-220 | 250 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 300 | 150-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 280 | 300 | 250 | 280 | 320 |
| பாகற்காய் | 450 | 600 | 350 | 400 | 400 |
| வெண்டக்காய் | 200 | 120 | 100 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 160 | 200 | 150 | 240 |
| பயற்றங்காய் | 400 | 300 | 400 | 400-450 | 400 |
| லீக்ஸ் | 320 | 300 | 300 | 220 | 400 |
| பீற்றூட் | 100 | 140 | 180 | 80-90 | 200 |
| கறிமிளகாய் | 400 | 450 | 600 | 350 | 600 |
| முருங்கைக்காய் | 450 | 400 | 400 | 200-250 | 300 |
| போஞ்சி | 350 | 450 | 550 | 300 | 500 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 160 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 130 | 100 | 150 | 80 | 100 |
| தேசிக்காய் | 400 | 400 | 450 | 400-500 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 150 | 160 | 80-150 | 100-140 |
| இராசவள்ளி | -- | 900 | 800 | 600 | 1200 |
| வெங்காயப்பூ | 350 | 450 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 80 | 120 | 120 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 70 | 120 | 100 | 100 |
| வல்லாரை | 160 | 30 | 80 | 100 | 100 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | -- | 160 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3235

விதுசன்




மிதுனா




மதுஷிகன்




ஜஸ்ரீன்




சிரோமி




சதீஷ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழன்று விழும் நிலையில் பதாகை

## பொதுமக்கள் அச்சம்

(சாவகச்சேரி) சாவகச்சேரி நகரில் நவீன சந்தைக் கட்டடத் தொகுதியில் பொருத்தப்பட்டிருக்கும் விளம்பரப் பதாகையால் உயிர்ச் சேதம் ஏற்படக்கூடிய அபாய நிலைமை காணப்படுவதாக பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

விளம்பரங்களை காட்சிப்படுத்தவென பொருத்தப்பட்ட பதாகையே இவ்வாறு காற்றுக்கு கழன்று விழுந்து சேதத்தை ஏற்படுத்தக்கூடிய நிலைமையில் காணப்படுவதாகவும் இது தொடர்பாக உரிய தரப்பினர்கள் குறித்த பதாகையை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் மற்றும் வர்த்தகர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (நி-30)


# தர்மமுழக்கம் – 2024

கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி | கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்





அதிபர் :- திருமதி.இ.கந்தசாமி
அணித்தலைவர் :- செல்வன்.க.றொபின்சன்

அதிபர் :- திரு.ப.ஆனந்தராசா
அணித்தலைவர் :- செல்வன்.அ.சுடர்மாறன்

இடம் :- தருமபுரம் பொது விளையாட்டு மைதானம்
காலம் :- 4,5.10.2024 (வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை)
நேரம் :- காலை 9.00 மணி

கிளி/தருமபுரம் மத்திய கல்லூரிக்கும் கிளி/முழங்காவில் மகாவித்தியாலயத்திற்கும் (தேசிய பாடசாலை) இடையிலான துடுப்பாட்டச் சமர்.
7 ஆவது தர்மமுழக்கம் இம்முறை தருமபுரம் பொது மைதானத்தில் மிக சிறப்பாக நடைபெற காத்திருக்கின்றது. இதுவரை நடைபெற்று முடிந்த 6 போட்டிகளில் 4 தடவை கிளி/தருமபுரம் மத்திய கல்லூரியும் ஒரு தடவை கிளி/முழங்காவில் மகா வித்தியாலயமும் இறுதியாக நடைபெற்ற போட்டி சமநிலையுடன் நிறைவு பெற்றிருந்தது.

(சி-1331)

பாடசாலைச் சமூகம்,
கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி, கிளி/ முழங்காவில் மகா வித்தியாலயம்.


# இராசிபலன்

04.10.2024
புரட்டாதி 18, வெள்ளிக்கிழமை
துதியை பின்னிரவு 4.17 மணிவரை
சித்திரை முன்னிரவு 6.37 மணிவரை
சுபநேரம் 6.02-7.32 மணிவரை
இராகுகாலம் 10.32-12.02 மணிவரை
உலக விலங்கு தினம்,
திருப்பதி கொடி
சந்திராஷ்டமம்: சதயம், பூரட்டாதி

வளவன்

**மேஷம்** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், உடல் நலன் சீராகும், மறக்க முடியாத இனிய சம்பவமொன்று இடம்பெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**ரிஷபம்** குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், செய்தொழில் மேன்மையுண்டு, வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**மிதுனம்** பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், நன்மைகள் நாடி வரும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள்.

**கடகம்** இல்லத்தில் சுப நிகழ்வுகள் இடம்பெறுவதற்கான வாய்ப்புண்டு, செய்தொழிலில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**கன்னி** தொழில் ரீதியாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், சுய முயற்சிகள் மூலம் சுகம் காணும் நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும், வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**துலாம்** திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், தொழிலில் புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்** எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், சுப செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**தனுசு** இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், வீட்டுத்தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், வழிபாடு நன்மை தரும்.

**மகரம்** சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கும்பம்** அலுவலகப் பணிகள் துரிதமாக நடைபெறலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், பயணங்கள் கைகூடும்.

**மீனம்** வரவுக்கு மிஞ்சிய செலவுகள் ஏற்படலாம், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்களின் போது கூடுதல் கவனம் தேவை.


**இக்காலத்தில் கள்வர்கள் காட்டிலில்லை காரியாலயத்தில் இருக்கிறார்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதையற்ற வாழ்வே
# ஆரோக்கியத்துக்கான வழி
## சங்கானையில் கவனயீர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**சர்வதேச நல்லொழுக்க தினத்தினை முன்னிட்டு வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினரின் ஏற்பாட்டில் போதைக்கு எதிரான கவ்னயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று சங்கானை பேருந்து தரிப்பு நிலையத்திற்கு முன்னால் இடம்பெற்றது.**



சங்கானையில் புதிதாக ஒரு மதுபானசாலை அமைப்பதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது.

குறித்த மதுபானசாலை அமைக்கவுள்ள இடத்திற்கு அருகாமையில் பாடசாலைகள், கல்வி நிலையங்கள், மத ஸ்தலங்கள், குடிமனைகள் காணப்படுகின்றன.

எனவே அந்தப் பகுதியில் மதுபானசாலைக்கு அனுமதி வழங்க வேண்டாம் எனக் கோரி இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

"மதுசார விலைகளை குறைத்து எமது சமூகத்தை அழிக்க வேண்டாம், போதையற்ற வாழ்வே ஆரோக்கியத்துக்கான வழி, எமது சமூகத்தை அழிக்கும் மது எமக்கு தேவைதானா, முடவனாக விரும்பும் மானிடனே மதுவை கையில் எடுக்காதே, இளைய சமூகமே மதுவை உங்கள் கைகளில் எடுக்காதீர், சிறுவர்களையும் மகளிரையும் மதுவுக்கு அடிமைப்படுத்தாதே என கோஷமிட்டு, பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தின் முடிவில் சங்கானை பிரதேச செயலர் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இதில் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினர், சங்கானை பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தினர், வலிகாமம் மேற்கு முச்சக்கர வண்டி சங்கத்தினர், அந்திரான் தோற் பயிற்சி உற்பத்தி விற்பனை கூட்டுறவு சங்கம், இளைஞர்கள், யுவதிகள் மற்றும் பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டார்கள். (6-33)

# பெருந்தொகை தென்னை மரங்கள் காட்டு யானைகளால் அழிப்பு

(வவுனியா)

வவுனியா ஈச்சங்குளத்தில் காட்டு யானைகளின் அட்டகாசத்தால் பெருந்தொகையான தென்னை மரங்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

குறித்த அனர்த்தமானது நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

நீர்த்தட்டுப்பாட்டு காலத்திலும் கஷ்டப்பட்டு தென்னையினை பயிரிட்டு வளர்ந்திருந்த நிலையிலே யானைகளினால் இவ்வாறு அழிக்கப்பட்டுள்ளதுடன், தங்களது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், வரவிருக்கும் பெரும் போக



விவசாயத்தினை யானையின் தாக்கத்திற்கு மத்தியில் எவ்வாறு செய்வது என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

இதற்கான சரியான தீர்வினை உரிய தரப்பினர்கள் தமக்கு பெற்றுத்தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (6)

# மார்பக புற்றுநோயை கண்டறிவோம்
## விழிப்புணர்வு நடைபவனி



(கரணவாய்)


"மார்பக புற்றுநோயை கண்டறிவோம், சிகிச்சை செய்வோம், தோற்கடிப்போம்" என்னும் தொனிப்பொருளில் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு நடைபவனி ஒன்று நேற்று பருத்தித்துறையில் இடம் பெற்றது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் இணைந்து குறித்த விழிப்புணர்வு நடைபவனியை முன்னெடுத்திருந்தனர்.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இருந்து ஆரம்பமான நடைபவனி பருத்தித்துறை- யாழ் பிரதான வீதி வழியாக பருத்தித்துறை பிரதேச செயலகத்தை சென்று அங்கு நிறைவடைந்ததைத் தொடர்ந்து விழிப்புணர்வு கருத்தரங்கும் இடம்பெற்றது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி திருமதி. பிருந்திகா செந்தூரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலாளர் எஸ்.சத்தியசீலன், உதவி பிரதேச செயலாளர் தயானந்தன், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி ஜி.செந்தூரன் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சுகாதார சேவை பணிமனையினர், சுகாதார பரிசோதகர்கள், தாதியர்கள் பங்குபற்றியிருந்தனர். (6-60)

# மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற சிறுவர்களுக்கான நடமாடும் சேவை



(யாழ்ப்பாணம்)

2024 ஆம் ஆண்டிற்கான சிறுவர் தினத்தையொட்டி இதுவரை பிறப்புச் சான்றிதழைப் பதிவு செய்யாத சிறுவர்களுக்கான நடமாடும் சேவையானது யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான ம.பிரதீபன் தலைமையில் கடந்த செவ்வாய்க் கிழமை 9 மணி தொடக்கம் பி.ப 4 மணி வரை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

குறித்த நடமாடும் சேவையில் காலங்கடந்த பிறப்பு பதிவு 41 சிறுவர்களுக்கும், உத்தேச வயதுப்பத்திரம் 5 பேருக்கும் பிறப்புச் சான்றிதழ் திருத்தம் 11 பேருக்கும், இறப்புப் பதிவு 3 பேர் என மொத்தமாக 60 பயனாளிகள் பயனடைந்தனர். இந்நிகழ்வில், பிரதிப் பதிவாளர் நாயகம் கே.நடராஜா, மாவட்ட மற்றும் பிரதேச சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள் மற்றும் சிறுவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தார்கள். (6-33)




மகாத்மா காந்தியின் 155 ஆவது ஜனனதின நிகழ்வினை முன்னிட்டு நேற்று முன்தினம் யாழில் இந்தியத் துணைத்தூதரக அதிகாரிகளால் துவிச்சக்கரவண்டி பவனியொன்று முன்னெடுக்கப்பட்டது.

# முதியோர் கௌரவிப்பு விழா

(கரணவாய்)

கம்பர்மலை கலாவாணி சனசமூக நிலையம் நடத்தும் மூத்தோர் கௌரவிப்பு விழா நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கலாவாணி முன்றலில் இடம்பெறவுள்ளது.

கலாவாணி சனசமூக நிலைய தலைவர் வே.கஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சி.சிறிசற்குணராசா கலந்து கொள்ளவுள்ளார். (6-60)

# கவிதை நூல்கள் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

இ.ஜெயசீலன் எழுதிய கவிதை நூல்களான "யாழ் மீட்டும் காற்று", "பிறகு கதைக்கிறேன்" ஆகிய இரு கவிதை நூல்களின் வெளியீட்டு நிகழ்வானது நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பருத்தித்துறை பிரதான வீதியின் அருகாமையில் உள்ள சூரிய மஹால் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் வேல் நந்தகுமார் தலைமையில் இடம்பெறவுள்ள இந்கிழ்வில் பிரதம விருந்தினராக சர்வதேச கலைஞர் சங்கத் தலைவர் கவிவேந்தர் [illegible] கலந்துகொள்ளவுள்ளார். (6)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழத்தினால் நடத்தப்படும் பொறியில் இளமாணி கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 18 வயதிற்கு மேற்பட்டவராக இருப்பதுடன் க.பொ.த (உ/த) பரீட்சையில் கணித பிரிவில் ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் மூதவையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஏதாவது தகைமையப் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து எதிர்வரும் 15.11.2024 வரை விண்ணப்பிக்க முடியும். மேலதிக விபரங்களிற்கு யாழ்.பிராந்திய நிலையம் பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முகவரியூடாகவும் மற்றும் 021 222 3374 எனும் தொலைபேசியூடாகவும் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும் என யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் கே.கந்தவேள் அறிவித்துள்ளார். (6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொதுத் தேர்தலுக்கு பின் விரைவில் உள்ளூராட்சி தேர்தல்

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தல் முடிவடைந்ததன் பின்னர் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் உத்தியோக பூர்வ மான தீர்மானத்தை அறிவிப்போம் என தேர்தல்கள் ஆணைக் குழு அறி வித்துள்ளது.

தேர்தல்களை நடத்துவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு சட்ட நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல்களை அடுத்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை சுமூகமாக நடத்துவதை உறுதி செய்வதற்காக முக்கியஸ்தர்களுடன் ஆரம்பக் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளதாகவும் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

"நாங்கள் தேவையான அடிப்படை பணிகளை நிறைவு செய்துவிட்டோம், பொதுத் தேர்தலுக்குப் பின்னர் உடனடியாக உள்ளூராட்சி மன்றத் தேர் தலை நடத்துவோம்" என ஆணைக்குழு மீண்டும் வலியுறுத்தியுள்ளது. (நி)

# எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் சுகாதார திணைக்களம் எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் காணப்படுவதாக சுகாதார திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது.


அதன்படி இந்த வருடத்தில் இதுவரை நாட்டில் சுமார் 7,500 எலிக்காய்ச்சல் நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார திணைக்களம் தெரிவித்துள்ளது.

டெங்கு நோயாளர்களின் இறப்பு விகிதத்தை விட எலிக்காய்ச்சல் நோயாளிகளின் இறப்பு வீதம் அதிகமாக இருப்பதாகப் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் சமிந்த முதுகுட தெரிவித்தார். (நி)

# நிறுத்தப்பட்ட உரமானியத்தை வழங்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

**தேர்தல் காரணமாக நிறுத்தப்பட்ட உரமானியத்தை வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் முன்னாள் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர கோரிக்கை விடுத்துள்ளார்.**



தேர்தல் காரணமாக நிறுத்தப்பட்ட உரமானியத்தை வழங்குமாறு முன்னாள் விவசாய அமைச்சர் தேர் தல்கள் ஆணைக்குழுவிடம் இது தொடர்பாக கடிதமொன்றை கையளித் துள்ளார்.

இதனையடுத்து கருத்து வெளியிட்ட அவர்,உரமானியத்தை மக்களுக்கு வழங் கியமைக்காக தற்போதைய ஜனாதிபதிக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும்ஆனால் விவசாயிகளுக்கு முப்பதாயிரம் ரூபாய் மானியம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

தேர்தல்கள் ஆணைக்குழு இந்த உர மானியம் வழங்குவதை இடை நிறுத்தியமையால் விவசாயிகளுக்கு பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் மீனவர்களுக்கும் எரிபொருள் மானியம் வழங்கப்பட வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (நி)

# உள்ளூராட்சி அமைச்சின் செயலாளராக ஆலோக பண்டார

(கொழும்பு)

உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு மற்றும் தொழில் அமைச்சு என்பவற்றின் புதிய செயலாளராக எஸ். ஆலோக பண்டார ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான நியமனக் கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது. (நி)


# நினைவு கூருகின்றோம்

எமது கல்லூரியின் ஆசிரியர்
திருமதி.குமாரதாஸ் தமிழ்வாணி
அவர்களின்
அன்புத் தாயார்
அமரர்.

**மங்கையற்கரசி இலகுநாதன்**



அவர்களின் பிரிவினால்
துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த இரங்கல்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-133)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யாழ்/கொக்குவில் இந்துக் கல்லூரி.


# ஏல விற்பனை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் எதிர்வரும் 08.10.2024 ஆம் திகதியன்று காலை 8.30 மணிக்கு எமது நீதிமன்ற வளாகத்தில் 36 டிப்பர் மணல்,4 டிப்பர் மண் மற்றும் 100 தகர பரல் என்பன ஏலத்தில் விற்கப்படவுள்ளன என கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (ஏ)


# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

**துணைவி ஒழுங்கை, இல 27/7 வட்டாரம்- 12**

வலிகாமம் மேற்கு பிரதேச சபை அராலி உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 12 துணைவி ஒழுங்கையிலுள்ள இல:27/7 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டின் பிரகாரம் M.மாணிக்கம் என்றே காணப்படுகிறது.

பெயர்மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய ஆதனத்தினை **முருகன் மாணிக்கம் பெண் கனகம்மா** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு சி.இரகுநாத முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2445/15.09.1943 ஆம் இலக்க உறுதியால் **சின்னவன் பண்டாரியும் பெண் ஆச்சிக்குட்டியும்** ஆகியவர்களிடமிருந்து சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**மாணிக்கம் சண்முகமும் பெண் பாக்கியமும்** ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு வே.நாகலிங்கம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 10823/22.08.1964 ஆம் இலக்க உறுதியால் **முருகன் மாணிக்கமும் பெண் கனகம்மாவும், பண்டாரி சின்னையாவும்** ஆகியவர்களிடமிருந்து மேற்படி ஆதனத்தில் ஒரு பகுதியினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள்.

**முருகன் மாணிக்கமும் பெண் கனகம்மாவும்** ஆகியவர்களுக்கு பிரசித்த நொத்தாரிசு வே.நாகலிங்கம் முகதாவில் 10826/07.06.1964 ஆம் இலக்க உறுதியால் குறித்த **மாணிக்கம் சண்முகமும் பெண் பாக்கியமும்** ஆகியவர்கள் குறித்த ஆதனத்தை கடனாகக் கட்டுப்படுத்தியிருந்தார்கள்.

குறித்த **சண்முகம் பெண் பாக்கியம்** காலஞ்செல்ல குறித்த ஆதனத்தில் சொரியலாய் 3/4 பங்கு அவரது கணவரான **மாணிக்கம் சண்முகத்திற்கும்**, மிகுதி 1/4 பங்கு பிள்ளைகளான **சுபேந்திரன் பெண் ஜெயராணியும், சண்முகம் மனோகரனும், சண்முகம் ஜெயகுமாரும், சண்முகம் மகள் தேவசுசீலாவும், சண்முகம் காமேஸ்வரனும், சண்முகம் மகள் புஸ்பராணியும்** ஆகியவர்களுக்கும் சென்றடைந்தது.

**நவரத்தினம் ஜெயக்குமார் பெண் நாகலோஜனி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வ.மயில்வாகனம் முகதாவில் நிறைவேற்றப்பட 4780/13.12.1988 ஆம் இலக்க உறுதியால் குறித்த **மாணிக்கம் சண்முகமும், சுபேந்திரனும் பெண் ஜெயராணியும், சண்முகம் மனோகரனும், சண்முகம் விஜயகுமாரும், சண்முகம் மகள் தேவசுசீலாவும், சண்முகம் காமேஸ்வரனும், சண்முகம் மகள் புஸ்பராணியும்** ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

**நவரட்ணம் ஜெயக்குமாரும் பெண் நாகலோஜனியும்** ஆகியவர்கள் தம்மால் குறித்த 4780 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனம் கொள்வனவு செய்யப்பட்டது என்றும் குறித்த உறுதியில் விற்பனையாளர்களாக 7 பேர் ஒப்பம் இட்டுள்ளனர் என்றும் குறித்த பிரசித்த நொத்தாரிஸ் உம் கையொப்பமிட்டு முழுமையாக நிறைவேற்றப்பட்ட உறுதியின் நிழற்படப்பிரதி தம்மிடம் உள்ளது என்றும் குறித்த உறுதி நிறைவேற்றப்பட்ட 2 வருடங்களின் பின்னர் தாம் வெளிநாடு சென்றுவிட்டார்கள் என்றும் குறித்த 4780 ஆம் இலக்க உறுதியின் இணைப்பிரதிக்கு காணிப்பதிவகத்தில் விண்ணப்பித்திருந்த நிலையில் குறித்த இணைப்பிரதி ஒப்படைக்கப்படவில்லையென்றும் குறித்த 4780 ஆம் இலக்கத்தில் வேறு ஆதனமே பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் எனினும் குறித்த ஆதனம் தற்போது தங்களின் கட்டுக்காப்பிலும், பராமரிப்பிலும், பாதுகாப்பிலுமே உள்ளதாகவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு ச.க.கணேசவேல் முகதாவில் 2172/18.09.2022ஆம் இலக்கத்தில் பிரகடன உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்கள்.

**நவரட்ணம் ஜெயக்குமாரும் பெண் நாகலோஜனியும்** ஆகியவர்கள் தாம் குறித்த 4780 ஆம் இலக்க அறுதி உறுதியால் சொந்தக்காரரானார்கள் என்றும் எனினும் குறித்த உறுதியானது குறித்த நொத்தாரிசினால் காணிப்பதிவகத்திற்கு பதிவுக்கு அனுப்பப்படவில்லை என்பதோடு அதன் இணைப்பிரதியும் காணிப்பதிவகத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவுமில்லை என்றும் குறித்த ஆதனம் தமக்குரியது என்பதற்காக குறித்த 2172 ஆம் இலக்க பிரகடன உறுதியை நிறைவேற்றியிருந்தார்கள் என்றும் குறித்த பிரகடன உறுதியில் 4780 ஆம் இலக்க உறுதியில் வேறு ஆதனம் பதியப்பட்டுள்ளதாக தவறுதலாக குறிப்பிடப் பட்டுள்ளது என்றும் குறித்த உறுதியானது பதிவுக்காக சமர்ப்பிக்கப்படவில்லை என்பதும் இணைப்பிரதி ஒப்படைக்கப்படவில்லை என்பதுமே உண்மையான விடயமாகும் என்றும் குறித்த 4780 ஆம் இலக்க உறுதியின் இணைப்பிரதி காணிப்பதிவகத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தியே காணிப்பதிவகத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி வழங்கப்பட்டுள்ளது என்றும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு செல்வி.பரமநாதன் திலக்ஷனா முகதாவில் 1839/05.09.2023 ஆம் இலக்கத்தில் உறுதிப்படுத்தலும் வெளிப்படுத்தலும் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்கள்.

குறித்த **நவரட்ணம் ஜெயக்குமாரும் பெண் நாகலோஜனியும்** ஆகியவர்கள் ஆதனத்தின் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள்.

இவ் ஆதனங்களின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராத விடத்து குறித்த ஆதனமானது **நவரட்ணம் ஜெயக்குமாரும் பெண் நாகலோஜனியும்** ஆகியவர்களுக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனத்தின் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(2186)


**செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## ஈரான் அணு உலைகள் மீதான தாக்குதலை ஏற்கமாட்டோம்

### இஸ்ரேலுக்கு அமெரிக்கா அறிவுரை



(வோஷிங்டன்)

இஸ்ரேலுக்கு என்றும் பாதுகாப்பு அரணாக அமெரிக்கா இருக்கும் என அந்நாட்டு ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் ஈரானில் உள்ள அணு உலை தளபாடங்கள் மீது தாக்குதல் நடத்துவதை ஏற்கமாட்டோம் என்றும் அவர் தெரிவித்தார்.

இஸ்ரேல் - ஈரான் இடையே போர் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஜி-7 நாட்டு தலைவர்களுடன் தொலைபேசி வாயிலாக கலந்துரையாடியபோது மேற்கண்டவாறு தெரிவித்தார். (நி)

## வியட்நாமில் பறவைக்காய்ச்சல் 47 புலிகள் உயிரிழப்பு



(வியட்நாம்)

வியட்நாம் மிருகக் காட்சிச்சாலையில் பரவிய பறவைகாய்ச்சல் காரணமாக 47 புலிகள் உயிரிழந்துள்ளன என மிருகக் காட்சி சாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

ஓகஸ்ட் மாதம் முதல் 47 புலிகள் உயிரிழந்துள்ளன, மூன்று சிங்கங்களும் இறந்துள்ளன என மிருகக்காட்சிச்சாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

ஹோசி மின் நகருக்கு அருகில் உள்ள வூன் சோய் உயிரியல் பூங்கா மற்றும் லோங் ஒன் மாகாணத்தில் உள்ள மைகுயின் சபாரி பூங்கா விலும் பறவைக் காய்ச்சல் பரவியுள்ளது.

பாதிக்கப்பட்ட கோழிகளின் இறைச்சியை உண்ட விலங்குகள் நோய்வாய்ப்பட்டன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த புலிகளிடமிருந்து எடுக்கப்பட்ட இரண்டு மாதிரிகளை சோதனை செய்ததில் பறவைக்காய்ச்சல் தொற்று உறுதியாகியுள்ளது, என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (நி)

## மழையாவது... புயலாவது...

# 50 கி.மீ நடந்து சென்று திருமணத்தில் பங்கேற்ற தந்தை



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் தனது மகளின் திருமணத்தில் பங்கேற்பதற்காக புயல் மழைக்கு மத்தியில் 50 கி.மீ தூரம் நடந்து சென்ற தந்தை இந்த ஆண்டின் சிறந்த தந்தையாகத் தேர்வாகியுள்ளார். அந்த தந்தையின் பெயர் டேவிட் ஜோன்ஸ், அமெரிக்காவின் வோஷிங்டன் நகரில் உள்ள ஜான்சன் சிட்டியில் வசிக்கிறார்.

இவரது மகள் எலிசபெத்துக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டது. திருமணத்துக்கு முந்தைய நாள் அவர் அங்குள்ள வேறொரு பகுதியில் இருந்தார்.

அந்த 2 பகுதிகளுக்கும் இடையே உள்ள தூரம் 50 கி.மீ. ஆகும். ஆனால் அந்த பகுதிக்குக் காரில் செல்ல வேண்டுமென்றால் 2 மணி நேரம் ஆகும்.

ஆனால் அங்கு பெய்த புயல் மழை காரணமாக போக்குவரத்துத் தடைபட்டது. இதனால் திருமணம் நடைபெற்ற பகுதிக்கு கார் உள்ளிட்ட வாகனங்களில் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. ஆனாலும் மகளின் திருமண விழாவில் பங்கேற்பதில் டேவிட் ஜோன்ஸ் தீவிரமாக இருந்தார்.

மரதன் வீரரான ஜோன்ஸ், இயற்கை பேரிடரை கண்டு பயப்படவில்லை. மகளின் திருமணத்தில் பங்கேற்க அங்கிருந்து 50 கி.மீ. தூரம் நடந்தே செல்வது என்று முடிவு செய்தார். தனது பயணத்துக்கு தேவையான சில அத்தியாவசியப் பொருட்களை ஒரு பையில் எடுத்துக் கொண்டு அந்தப் பையை தனது முதுகில் மாட்டியபடி நடை பயணத்தைத் தொடங்கினார்.

கடும் புயல், மழைக்கு மத்தியில் பெரும் சோதனைகளை அனுபவித்து. சுமார் 12 மணி நேரத்தில் 50 கி.மீ. தூரம் நடந்து சென்று தனது மகளின் திருமணம் நடைபெற்ற இடத்தை அடைந்தார். அவரை பார்த்ததும் அவரது மகள் எலிசபெத் ஆனந்தக் கண்ணீர் வடித்தார்.

மகளின் திருமணத்தில் பங்கேற்க கடும் புயல், மழைக்கு மத்தியில் 50 கி.மீ. தூரம் நடந்து சென்ற தந்தை அனைவருக்கும் ஹீரோவாகப் பார்க்கப்படுகிறார். மேலும் இந்த ஆண்டின் சிறந்த தந்தை எனவும் பெயரெடுத்தார். (நி)

## இஸ்ரேலெ

## எர்டோ

(அங்காரா)

### லெபனானுக்கு
### இஸ்ரேல் தாக்கு
### துருக்கி ஜனாதி
### துள்ள எச்சரிக்
### தோற்றுவித்துள்

காசாவில் இராணுவ நடவடிக்கையை நடத்திய பிறகு லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில் இஸ்ரேலிய படைகள் லெபனானுக்கு பிறகு துருக்கி மீது தான் தாக்குதல் நடத்தலாம் என்று எர்டோகன் தெரிவித்துள்ளார்.

இது
தெரிவித்
"இஸ
இடைய
வடிக்கை
ரேல்-வ
யிலான
கடந்த
நடைபெ
அப்
தலைவ
பதிகள்

## ஜிபூட்டி கடற்

### படகு கவிழ்ந்ததில்



(ஏமன்)
ஜிபூட்டி கடற்பகுதியில் இரண்டு புல
கவி

## ஜப்பான் விமான நி

## 87 விமானங்க

(டோக்கியோ)

தெற்கு ஜப்பானில் இருக்கும் கியூஷு தீவில் மியாஸாக்கி விமான நிலையம் அமைந்துள்ளது. இந்த விமான நிலைய முனையத் லிருந்து சுமார் 100 மீற்றர் தொலைவில் திடீரெனக் குண்டு வெடிப்பு ஏற்பட்டுள் ளது.

இரண்டாம் உலகப் போரின் போது வீசப்பட்ட அமெரிக்க வெடிகுண்டு வெடித்ததால் விமான நிலையம் மூட

வேண
டது.
இத
போக்
தின்ப
றும்
தின்
தலில்
புதை
குண்
பதை
இர
சம்ப

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரலின் அடுத்த இலக்கு துருக்கி!

## டோகனின் எச்சரிக்கையால் சர்ச்சை

**க்கு பிறகு துருக்கி மீது க்குதல் நடத்தலாம் என்று ாதிபதி எர்டோகன் விடுத் ரிக்கை பெரும் சர்ச்சையை துள்ளது.**



இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர்,

"இஸ்ரேல்-ஹமாஸ் இடையிலான போர் நடவடிக்கை தற்போது இஸ்ரேல்-ஹிஸ்புல்லா இடையிலான சண்டையாக கடந்த சில வாரங்களாக நடைபெற்று வந்தது.

அப்போது ஹிஸ்புல்லா தலைவர் மற்றும் பல தளபதிகள் இஸ்ரேலிய தாக்குதலில் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து இஸ்ரேலின் இந்த தீவிர போக்குக்கு பதிலடி கொடுக்கும் விதமாக ஈரான் இஸ்ரேல் மீது 400 இற்கும் மேற்பட்ட ஏவுகணைகளை ஏவி தாக்குதல் நடத்தியுள்ளது.

ஈரானின் தாக்குதலுக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ள நிலையில், ஈரான் தவறிழைத்து விட்டதாகவும் இதற்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்றும் இஸ்ரேல் எச்சரித்துள்ளது.

ஆக்கிரமிப்பு மற்றும் பயங்கரவாதம் ஏற்கனவே நமது வாசலில் உள்ளது, தற்போது நாம் எதிர்கொள்வது சட்டத்திற்கு கட்டுப்பட்ட நாட்டை அல்ல, இரத்தத்தை உண்ணும் கொலையாளி குழுவுக்கே என்று அவர் தெரிவித்துள்ளார். (நி)

## டற் பகுதியில் ...தில் 45 பேர் பலி




டு புலம்பெயர்ந்த படகுகள் கவிழ்ந்ததில் குறைந்தது 45 பேர் இறந்துள்ளதோடு பலர் காணாமல் போயுள்ளனர்.

310 பேருடன் ஏமனில் இருந்து புறப்பட்ட படகுகள் நேற்று முன்தினம் கிழக்கு ஆபிரிக்க நாட்டிலிருந்து செங்கடலில் மூழ்கியதாக சர்வதேச குடியேற்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

61 நபர்கள் காணாமல் போயுள்ளதாகக் கூறப்படும் நிலையில் தேடல் பணிகள் இடைவிடாமல் தொடர்கின்றன என்று ஜிபூட்டியின் கடலோர காவற்படை தெரிவித்துள்ளது. (நி)

## முதல் நாள் தாக்குதல் வெறும் டீசர் தான்! இஸ்ரேலை நேரடியாக மிரட்டிய ஈரான்!



(டெஹ்ரான்)

பாலஸ்தீனம் மற்றும் லெபனானில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலுக்கு மத்தியில் ஈரான் இராணுவம் இஸ்ரேல் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தி வருகிறது. 400 இற்கு மேற்பட்ட ஏவுகணைகளை இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் உள்ளிட்ட பகுதிகளில் ஈரான் ஏவியுள்ளது.

அவற்றை இஸ்ரேல் இராணுவம் தாக்கி அழித்து வரும் சூழலில் மக்கள் பாதுகாப்பு பங்கர்களில் தஞ்சம் அடைந்துள்ளனர். இந்த நிலையில், இஸ்ரேல் மீதான தாக்குதல் குறித்து ஈரான் ஜனாதிபதி மசூத் பெசஸ்கியான் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அதில் "நியாயமான உரிமைகளின் அடிப்படையிலும், ஈரான் மற்றும் பிராந்தியத்திற்கான அமைதி மற்றும் பாதுகாப்பின் நோக்கத்துடன், சியோனிச ஆட்சியின் ஆக்கிரமிப்புக்கு ஒரு தீர்க்கமான பதில் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை ஈரானின் நலன்களையும் குடி மக்களையும் பாதுகாக்கும் வகையில் தான் இருந்தது.

"ஈரான் போர்க் குணமிக்க நாடு அல்ல.ஆனால் அது எந்த அச்சுறுத்தலுக்கும் எதிராக உறுதியாக நிற்கிறது என்பதை நெதன்யாகுவுக்கு தெரியப்படுத்துங்கள். இது எங்களது சக்தியின் ஒரு பகுதி மட்டும்தான். ஈரானுடன் மோதலில் ஈடுபட வேண்டாம்." என்று குறிப்பிட்டுள்ளார். (நி)

## ன நிலையத்தில் குண்டு வெடிப்பு ...ங்கள் ரத்து



வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இது குறித்து ஜப்பானின் போக்குவரத்து அமைச்சகத்தின்படி, வெடிகுண்டு அகற்றும் குழு, போர்க்காலத்தின்போது வான்வழித்தாக்குதலில் நிலத்தின் அடியில் புதைந்த அமெரிக்க வெடிகுண்டால் வெடித்தது என்பதை உறுதிப்படுத்தியது.

இந்த குண்டு வெடிப்பு சம்பவத்தில் அதிஷ்டவசமாக யாருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை. மேலும் வெடிப்புகள் ஏற்படும் அபாயம் இல்லை என்றாலும் 87 விமான சேவை ரத்து செய்யப்பட்டுள்ளன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒக்டோபர் மாத இராசி பலன்கள்-2024

## பணவரவு எதிர்பார்த்தபடி இருக்கும்



கிரகநிலை - ராசியில் புதன் - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சூரியன், சுக்கிரன், கேது - களத்திர ஸ்தானத்தில் சந்திரன், சனி (வ) - அஷ்டம ஸ்தானத்தில் ராகு - தொழில் ஸ்தானத்தில் குரு - லாப ஸ்தானத்தில் செவ்வாய் என கிரக நிலை உள்ளது.

**கிரகமாற்றங்கள்**

06-10-2024 அன்று புதன் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14-10-2024 அன்று சுக்கிரன் இராசியில் இருந்து தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 17-10-2024 அன்று சூரியன் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 23-10-2024 அன்று செவ்வாய் லாப ஸ்தானத்தில் இருந்து அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 25-10-2024 அன்று புதன் தன, வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்**

இந்த மாதம் இராசிநாதன் சூரியன் தனஸ்தானத்தில் இருக்கிறார். வீண்கவலை அகலும். மற்றவர்கள் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது. வெளிவட்டார தொடர்புகளினால் நன்மைகள் ஏற்படும். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் அதிகரிக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

பழைய பாக்கிகளை வசூல் செய்வதில் வேகம் காட்டுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். எடுத்த வேலையை செய்து முடிப்பதற்குள் இருந்த தடங்கல்கள் நீங்கும். குடும்பத்தில் இருப்பவர்களால் டென்ஷன் உண்டாகலாம்.

கணவன், மனைவிக்கிடையில் கருத்து வேறுபாடு வராமல் இருக்க மனம் விட்டுப் பேசுவது நல்லது. பிள்ளைகள் நலனில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. எதிலும் திருப்தி இல்லாதது போல் தோன்றும். பெண்களுக்கு கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. சுபச்செலவுகள் ஏற்படும்.

கலைத்துறையினருக்கு எடுக்கும் காரியங்கள் நல்லபடியாக நடக்கும். அரசியல்துறையினருக்கு லாபம்




அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும்.

**மகம்**

இந்த மாதம் எதிர்த்து செயற்பட்டவர்கள் அடங்கி விடுவார்கள். பண வரத்தும், எதிர்பார்த்தபடி இருக்கும். எதிர்பாலினத்தாரின் நட்பும் அதனால் மகிழ்ச்சியும் உண்டாகும்.

விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொள்ள நேரிடலாம். வீண்செலவு உடல்நல பாதிப்பு ஏற்படலாம். கவனம் தேவை.

**பூரம்**

இந்த மாதம் அதிஷ்டங்கள் வந்து சேரும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் காண கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும்.

வாடிக்கையாளர்களின் ஆதரவு நீடிக்கும். தொழில் விரிவாக்கம் பற்றிய எண்ணம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் புதிய பதவி அல்லது கூடுதல் பொறுப்புகள் கிடைக்க பெறுவார்கள்.

**உத்தரம் 1 ஆம் பாதம்**

இந்த மாதம் குடும்பத்தில் இருப்பவர்களின் நலனுக்காக செலவு செய்ய வேண்டி இருக்கும். கணவன், மனைவிக்கிடையே அன்பு அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவையைப் பூர்த்தி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். அவர்கள் உங்களை மதிப்பது மனதுக்கு இதமளிக்கும்.

**பரிகாரம்:** ஞாயிற்றுக்கிழமை சர்பேஸ்வரரை வணங்க காரிய தடை நீங்கும். மனஅமைதி கிடைக்கும். அதிர்ஷ்ட கிழமைகள்: ஞாயிறு,செவ்வாய்,வியாழன். சந்திராஷ்டம தினங்கள்: 16, 17 அதிஷ்ட தினங்கள்: 9, 10.

## மனக்கஷ்டம் அகலும்



கிரகநிலை - ராசியில் சூரியன், சுக்கிரன், கேது - ரண ருண ரோக ஸ்தானத்தில் சந்திரன், சனி (வ) - களத்திர ஸ்தானத்தில் ராகு - பாக்கிய ஸ்தானத்தில் குரு - தொழில் ஸ்தானத்தில் செவ்வாய் - அயன சயன போக ஸ்தானத்தில் புதன் என கிரகநிலை உள்ளது.

**கிரகமாற்றங்கள்**

06-10-2024 அன்று புதன் ராசியில் இருந்து தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14-10-2024 அன்று சுக்கிரன் அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து ராசிக்கு மாறுகிறார். 17-10-2024 அன்று சூரியன் இராசியில் இருந்து தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 23-10-2024 அன்று செவ்வாய் தொழில் ஸ்தானத்தில் இருந்து லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 25-10-2024 அன்று புதன் இராசியில் இருந்து தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்**

இந்த மாதம் இராசிநாதன் புதன் இராசிக்கு வருகிறார். அனைவரும் உங்களிடம் நேசமுடன் பழகுவார்கள். மற்றவர்களால் இருந்த மன கஷ்டம் அகலும். அடுத்தவர்கள் கடனுக்கு பொறுப்பேற்காமல் இருப்பது நல்லது. எந்த ஒரு காரியமும் வேகமாக நடக்கும். எதிர்ப்புகளை சிறப்பாக சமாளிப்பீர்கள்.

தொழில் வியாபாரம் எதிர்பார்த்த அளவு இலாபம் வராவிட்டாலும், சுமாராக வரும். ஆனால் புதிய ஓடர்கள் வந்து சேரும். தொழில் தொடர்பான செலவு கூடும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சிறிய வேலைக்கும் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் இருப்பவர்களின் அனுசரித்துச் செல்வது நல்லது. அவர்களின் நலனுக்காக செலவு செய்ய வேண்டி இருக்கும். கணவன், மனைவிக்கிடையில் திடீர் இடைவெளி ஏற்படலாம். பிள்ளைகள் அறிவுத் திறன் கண்டு ஆனந்தப்படுவீர்கள்.

பெண்களுக்கு சுபச்செலவுகள் உண்டாகும். காரிய தாமதம் அகலும். கலைத்துறையினருக்கு வாய்ப்




புகள் வரும். அரசியல்துறையினருக்கு எதிர்பார்க்கும் பதவிகள் கிடைக்கும். மாணவர்களுக்கு கூடுதல் மதிப்பெண் பெற மிகவும் கவனமாக படிக்க வேண்டி இருக்கும்.

**உத்தரம் 2, 3, 4ஆம் பாதங்கள்:**

இந்த மாதம் முயற்சிகள் கைகூடும். மனதில் வீண்குழப்பம் உண்டாகும். உங்களிடம் ஆலோசனை கேட்டு உங்களை நாடி சிலர் வரக்கூடும். மாணவர்கள் கல்வியில் வெற்றி பெற எடுக்கும் முயற்சிகள் நல்ல பலன் தரும். சக மாணவர்களின் நட்பும் கிடைக்கும்.

**அத்தம்**

இந்த மாதம் மனதில் இருக்கும் கவலைகள் பறந்தோடும். எதிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களின் நலனுக்காக தன் நலனை பாராமல் உழைப்பீர்கள். எதிர்பார்த்த படி காரியங்கள் நடந்து முடியாமல் காரிய தாமதம் உண்டாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படலாம்.

**சித்திரை 1,2,ஆம் பாதங்கள்**

இந்த மாதம் வீண் வாக்கு வாதத்தால் பகை உண்டாகலாம். பயணத்தில் தடங்கல், வீண் செலவு போன்றவை ஏற்படும். நன்மைகள் உண்டாகும். பணவரத்து இருக்கும். வாகன யோகம் உண்டாகும். பெரியோர்களின் உதவி கிடைக்கும். மனதில் தைரியம் உண்டாகும். எதிலும் தயக்கமோ, பயமோ ஏற்படாது.


**பரிகாரம்:** வராகி தேவியை வணங்க எல்லா நன்மைகளும் உண்டாகும். திருமணம் ஆகாதவர்களுக்கு விரைவில் திருமணம் கூடும். அதிஷ்ட கிழமைகள்: திங்கள்.புதன், சந்திராஷ்டம தினங்கள்: 18, 19

அதிர்ஷ்ட தினங்கள்: 11, 12, 13

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வவு.பிரதேச செயலாளராக
# பிரதாபன் பதவியேற்பு



(நெளுக்குளம்)

வவுனியா பிரதேச செயலகத்தின் புதிய பிரதேச செயலாளராக இ. பிரதாபன் நேற்று முன்தினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

வவுனியா பிரதேச செயலகத்தில் காணப்பட்ட பிரதேச செயலாளர் பதவி வெற்றிடத்தினை நிவர்த்தி செய்யும் வகையில் வவுனியா நெடுங்கேணி பிரதேச செயலாளராக கடமையாற்றிய இ.பிரதாபன் நியமிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா அரசாங்க அதிபர் பி. எ. சரத்சந்திர, வவுனியா உதவிதேர்தல் ஆணையாளர், பிரதேச செயலக ஊழியர்கள், கிராம சேவையாளர் கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (6-250)

# திடீர் இடமாற்றத்திற்கு காரணம் என்ன?
## வரணியில் போராட்டம்

(சாவக்கேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வரணி நாவற்காடு கிராம மக்கள் கிராம உத்தியோகத்தரை இடமாற்ற வேண்டாம் எனக்கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.

நாவற்காடு - கிராம அலுவலராக கந்தசாமி தர்மேந்திரா என்பவர் கடமையாற்றி வந்த நிலையில்அவர் நியமிக்கப்பட்டு ஆறு மாதங்கள் பூர்த்தியாகாத நிலையில் அவருக்குத் திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றத்தை இரத்து செய்யக்கோரி கிராம மக்கள் கையெழுத்து மகஜர் ஒன்றை தயார்ப்படுத்தி பிரதேச செயலரின் கவனத்திற்கு கொண்டு சென்ற போதிலும் மக்களின் கோரிக்கைக்கு உரிய தீர்வு வழங்கப்படாத நிலையில் பிரதேச மக்கள் இணைந்து தீர்வு கோரி நாவற்காடு பொது மண்டபத்தில் அமைந்துள்ள கிராம அலுவலகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டனர்.

மாற்றாதே மாற்றாதே கிராம அலுவலரை மாற்றாதே. உடனடி இடமாற்றத்திற்கு காரணம் என்ன? போன்ற கோசங்களை எ்முப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (6-30-33)

# கிளிநொச்சியில் இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு குழுக்கூட்டம்

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் டெங்கு ஒழிப்பு குழுக் கூட்டமானது மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரனின் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடை பெற்றது.

இதன்போது மாவட்ட தொற்று நோயியல் வைத்திய அதிகாரி மருத்துவர் க.றஞ்சனால் டெங்கு நோய்த் தாக்கம் மற்றும் மாவட்டத்தின் தற்போதைய நிலைமை தொடர் பில் விளக்கமளித்தார்.

இதன்போது வடகீழ் பருவ மழை ஆரம்பித்துள்ள நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய முன்னாயத்த நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ப்பட்டன.

மாவட்டத்தின் அடையாளப்படுத்தப்பட்டுள்ள முக்கிய இடங்களில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தினை முன்னெடுத்துச் செல்வதற்காக குழுக்கள் அமைக்கப்பட்டன.

மேலும் மழைக்காலம் காரணமாக டெங்கு நோய் பரவும் அபாயமுள்ள பகுதிகளைக் கண்டறிந்து வாராந்த முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பிப்பது பற்றியும் பல விடயங்கள் இதன் போது கலந்துரையாடப்பட்டன.

குறித்த கலந்துரையாடலில் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் (காணி), சுகாதார திணைக்கள அதிகாரிகள், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகங்களின் பதவி நிலை உத்தியோகத்தர்கள், பொலிஸ், இராணுவ அதிகாரிகள் மற்றும் துறைசார்ந்த திணைக்களங்களின் அரச அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (6-316)




வவுனியா செட்டிக்குளம் அருவித்தோட்டம் சிவானந்தா வித்தியாலயத்தில் 'சிறார்கள் நாளைய தலைவர்கள்' எனும் தொனிப்பொருளிலான சர்வதேவ சிறுவர் தின நிகழ்வும் விழிப்புணர்வு பேரணியும் கடந்த திங்கட் கிழமை இடம் பெற்றது. (படம்: யதுபாஸ்கரன்)



# எனது 33 வருட ஆன்மீக போராட்டப் பாதையிலே...!

ஈசுர விநாயகர் அருட்குரல் 11.11.2019 சோழியபுரம் பத்ம வெளியீட்டில் இலங்கையின் இன்றைய நிலையில் சிங்கள மக்கள் தமது பழைய சிங்கள அரசியல் கலாசாரத்தை மீள் பரிசீலனை செய்ய வேண்டியது அவசியம் எனக்கூறியிருந்தேன். அதற்கேற்றவாறு முறைமையில் மாற்றம் என்னும் அறகலய மக்கள் எழுச்சிப் போராட்டம் ஏற்பட்டது. அவர்களால் ஆட்சி அமைக்க முடியவில்லை.

இதன் காரணமாக ரணில் விக்கிரமசிங்க அவர்கள் கோட்டபாய அரசால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு நாட்டைப் பெறுப்பேற்றுக் கொண்டார். அப்போது நாட்டில் பொருளாதாரம் வங்குரோத்து நிலையில் காணப்பட்டதால் நாடும் மக்களும் மிகப்பெரும் பலவித கஷ்டங்களுக்கும் துன்பங்களுக்கும் முகங்கொடுத்தனர். இவர்களது ஆட்சியில் ஏற்பட்ட வெறுப்புக் காரணமாக சிங்கள மக்கள் மாற்றத்தை விரும்பினார்கள். இம் மாற்றமே கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க அவர்களுக்கு பெருவெற்றியுடன் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்பதை ஈசுர விநாயகரின் அருளாசியுடன் அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

மேன்மை தங்கிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அவர்களுக்கு எனது நல் வாழ்த்துக்களைக்கூறுவதுடன்சுழிபுரம் பறாளாய் சர்வவல்லமை பொருந்திய ஈசுர விநாயகரே அவருக்குத் துணை நிற்பார் என்பதையும்அறியத்தருகின்றேன்.

மனித சக்தியை ஆட்டிப் படைப்பது தெய்வசக்தி

விநாயகருக்கு உரிய நாள் 21 (21.09.2024) சங்கடஹர சதுர்த்தி தினத்திலே ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது எதற்காக? யாருக்காக?

என் இனிய நெஞ்சங்களே !

மேன்மை தங்கிய முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கட்கு. அடியேன் ஓர் அவசர செய்தி அனுப்பியிருந்தேன். அதாவது தேர்தலைப் பிற்போட்டு தமிழ் மக்களின் பிரச்சினைக்கு உடனடித் தீர்வு காண வேண்டும். தவறினால் நாடு பறிபோவது நிச்சயம் என்பதாகும். இச்செய்தியை 24.07.2024 வலம்புரிப் பத்திரிகையில் உங்கள் எல்லோருக்கும் அறியத் தந்திருந்தேன். பார்த்தீர்களா!

அவரைவிட்டு நாடு பறி போய் விட்டது. இச்சம்பவம் இனிமேல் நடக்கப்போகும் சம்பவங்களுக்கு அடையாளம் ஆகும். தேர்தல் விடயத்திலே மனித சக்தியை ஆட்டிப்படைத்துவிட்டது தெய்வீக சக்தி. இனிமேல் நடக்கப் போகின்ற காரியங்கள் எல்லாமே யாரும் எதிர்பாராத ஆச்சரியப் படத்தக்க காரியங்களாகத் தான் இருக்கும். யாரும் எதிர்பாராத காரியங்கள் நடக்கின்றது என்றால் அது இறைவனால் நடக்கின்றது என்பதை உணர்வோமாக என்று 06.09.2024 வலம்புரிப் பத்திரிக்கையிலே அடியேன் எல்லோருக்கும் அறியத்தந்திருந்தேன். எனவே இத் தேர்தல் ஈசுர விநாயகரினால் நடத்தப்பட்டது என்பது தான் உண்மை. எதற்காக? தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவே. காரணங்கள் இல்லாமல் காரியங்கள் நடக்காது. நடப்பவை யாவும் நன்மைக்கே என்று அடியேன் அடிக்கடி கூறுவது எதற்காக? தமிழ் மக்களின் பிரச்சினையின் தீர்வுக்குரிய காலம் நெருங்கி விட்டது. அதனால் நடக்கப்போகின்ற சம்பவங்கள் யாரும் எதிர்பாராத. ஆச்சரியமான சம்பவங்களாகத் தான் இருக்கும். ஏன் தேர்தலைப் பாருங்கள். என்றுமில்லாதவாறு அமைதியாக நடந்திருக்கின்றது என்று எல்லோரும் கூறுகின்றார்களே அதுவே ஓர் எடுத்துக் காட்டாகும். இங்கே தான் தெய்வீகம். எனவே ஈசுர விநாயகரின் திருவிளையாடல்களை எதிர்கொள்வோமாக. நடைமுறையில் உணர்வோமாக. முடிவுச் சம்பவம் இதுவரை உணராத அனைத்து மக்களும் உணரப் போகின்றார்கள் என்றும் கூறியருளினார். அவரின் தெய்வீகம் சொல்லில் அடங்குமா. சொல்லி முடியுமா ?

என் அன்பு உள்ளங்களே!

இனிமேல் எது நடந்தாலும் தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்ப்பதற்காகவே என்பதைத் தமிழ் மக்கள் மறக்கக்கூடாது. மனிதனுக்கு சந்தர்ப்பம், சூழ்நிலைகளை உருவாக்கிக் கொடுப்பவன் தான் இறைவன். மனிதன் அச்சந்தர்ப்பத்தை தவறவிடாது பயன்படுத்தி வெற்றி காணவேண்டும். இவை தான் நம் இறைவனை வழிபடும் நோக்கமும் அதன் பலனும். இறைவன் நேரே வரமாட்டார். மனித சக்திக்கு அப்பாற்பட்டது தெய்வீக சக்தி. அதாவது மனிதனால் முடியாதவற்றிற்குத்தான் இறைவன். நினைப்பதெல்லாம் நடந்து விட்டால் தெய்வம் வேறில்லை. மனிதனே தெய்வமாகிவிடுவான். இறைவன் எதற்கு? எனவே எங்களால் முடியாது என்றவுடன் இறைவன் தான் தஞ்சம் என்று அடைகின்றோம். இறைவனும் எங்களுக்குத் தடையாக இருக்கின்ற யாவற்றையும் நீக்கி வெற்றியைத் தருவார் என்பதில் ஐயமே இல்லை

நடப்பவை யாவும்நன்மைக்கே என்பதற்கு சிறு கதையை அறியத் தருகின்றேன். அரசனுக்கு கைப் பெருவிரல் பாக்கு வெட்டும் போது துண்டாகி விட்டது. உடனே மந்திரியாரை அழைத்து எனது பெருவிரல் வெட்டுப்பட்டுவிட்டது என்று கவலையுடன் காட்டுகின்றார். மந்திரியார் நன்மைக்குத் தான் அரசே என்றார். உடனே அரசனுக்கு கோபம் வந்து விட்டது. காவலாளியைக் கூப்பிட்டு மந்திரியைச் சிறையில் அடையுங்கள் என்றார். இதுவும் நன்மைக்குத்தான் என்றார் மந்திரியார். ஒரு நாள் அரசன் நாட்டைச் சுற்றிப் பார்ப்பதற்காக மாறு வேடத்தில் வெளியே செல்கின்றார். காட்டுப்பாதையால் செல்லும் போது நரபலி எடுப்பவர்கள் ஆட்களைத் தேடுகின்றார்கள். இவரைக் கண்டதும் ஓடி வந்து பிடித்து விடுகின்றார்கள். அப்போது ஒருவன் அங்கவீனம் இருக்கா பாருங்கள் என்றதும் ஆமாம் பெருவிரலைக் காணவில்லை என்றனர். அவனை விட்டுவிடுங்கள் என்றதும் தப்பினேன் பிழைத்தேன் என்று ஓடிவந்து மந்திரியாரை சிறை மீட்டு அவரை வணங்கி நடந்தவற்றைக் கூறுகின்றார். அது சரி உன்னை சிறையில் அடையுங்கள் என்றதும் இதுவும் நன்மைக்குத்தான் என்றாயே அது என்ன? என்று கேட்கின்றார். அதற்கு மந்திரியார் சொன்னார் உங்களோடு நானும் வந்திருப்பேன். என்னிடத்தில் ஒரு அங்கவீனமும் இல்லை. என்னைத்தான் பலிக்கு கொண்டு போயிருப்பார்கள். சிறையில் இருந்ததால் நானும் தப்பிவிட்டேன் என்றதும் மந்திரியாரை விழுந்து கும்பிட்டு நீ தான் என்னைக் காத்த கடவுள் என்றாராம். பதிலுக்கு மந்திரியாரும்அரசனின் காலில்விழுந்து கும்பிட்டு என்னைக் காப்பாற்றிய கடவுள் நீங்கள்தான் என்று கூறி சந்தோசமாக இருந்தார்களாம். அடியேன் அடிக்கடி கூறும் நடப்பவையாவும் நன்மைக்கே என்பதின் அர்த்தத்தைப் பார்த்தீர்களா! முதல் துன்பமாக இருந்தாலும் முடிவு நன்மையே தரும். எனவே மீண்டும் "நடப்பவை யாவும் நன்மைக்கே" ஈசுர விநாயகரை சதா நினையுங்கள்! வணங்குங்கள் ! அவர் திருப்பாதம் போற்றி! போற்றி!

"பார் தெரியுது பறாளாயான் பதி" பக்தர் குறை தீர்க்கும் சந்நிதி"

சோழியூரான் பிறை சூடிக்குரு (2190)
(ஆன்மீகவாதியும், சந்ததிப் பூசகரும், பரம்பரைப் பரிபாலகரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 597



இத்தகைய காரணங்களினால் உன் பாட்டனாருக்குச் சுந்தரசோழர் மீது அபாரமான பிரேமை. ஆகையால், உன் தந்தை சிம்மாசனம் ஏறும்போது சுந்தர சோழருக்கு இளவரசுப் பட்டம் கட்டிவிடவேண்டும் என்றும் அவருடைய சந்ததியர்கள் தான் சோழ நாட்டை ஆண்டு வரவேண்டும் என்றும் சொல்லி விட்டுச் சிவபதம் அடைந்தார்.

இந்த விபரங்களையெல்லாம் உன் தந்தை என்னிடம் கூறினார். பராந்தகச் சக்கரவர்த்தி மரணத் தறுவாயில் வெளியிட்ட விருப்பத்தை நிறைவேற்ற அவர் உறுதி கொண்டிருந்தார். சுந்தர சோழரும் அவருடைய சந்ததியாரும் பட்டத்துக்கு வருவதில் எவ்வித இடையூறும் நேரிடக் கூடாதென்று எண்ணினார். உன் தந்தைக்கு இராஜ்யம் ஆளும் ஆசை இல்லை. இராஜரீக காரியங்களில் பற்றுதலும் இல்லை.

அவர் புண்ணிய புருஷர். அவருடைய உள்ளம் சதா சர்வ காலமும் நடராஜப் பெருமானின் இணையடித் தாமரைகளில் சஞ்சரித்துக் கொண்டிருந்தது. ஆகவே, தமது தம்பியாகிய அரிஞ்சயரிடமும், அவருடைய புதல்வர் சுந்தர சோழரிடமும் இராஜ்ய காரியங்கள் முழுவதையும் ஒப்படைத்திருந்தார். தாம் சிவபெருமானுடைய கைங்கரியத்தில் ஈடுபட்டிருந்தார். முன்னமே சொன்னேனே, அது போல் அவருக்கு மறுபடியும் மணம் செய்துகொள்ளும் எண்ணமே இருக்கவில்லை.

ஆனால் அவருடைய மன உறுதியைக் கலைக்க நான் ஒருத்தி வந்து சேர்ந்தேன். நானும் சிவபக்தியில் ஈடுபட்ட 'பிச்சி' என்று அறிந்ததனாலேயே அவர் என்மீது பிரியங் கொண்டு என்னைத் திருமணம் புரிந்தார். அவரைப் பதியாக அடைந்த நான் பாக்கியசாலி. எத்தனையோ ஜன்மங்களில் அவரை அடைய நான் தவம் செய்திருக்க வேண்டும். அவரைத் தந்தையாகப் பெற்ற நீயும் பாக்கியசாலி. இந்த உலகில் இறைவனைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்த மகான்கள் வெகு சிலர்தான். சிவபெருமான் ரிஷபாரூடராய் வந்து, உன் தந்தைக்குக் காட்சி தந்து, அவரை இம் மண்ணுலகிலிருந்து அழைத்துப் போனார். நான் இப்போது உன்னை என் ஊனக் கண்களால் பார்ப்பதுபோல உன் தந்தை பரமசிவனைத் தரிசித்தார். அப்படிப்பட்ட புண்ணிய புருஷருடைய விருப்பத்தை நிறைவேற்ற நானும் நீயும் கடமைப்பட்டவர்கள்!"

அன்னை இவ்விதம் கூறி நிறுத்தியபோது, கேட்டுக் கொண்டிருந்த மகனுடைய உடல் பதறிக்கொண்டிருந்தது. அவனுடைய உள்ளம் கொதித்துக் கொண்டிருந்தது.

"அது எப்படி, தாயே! என் தந்தை என்னிடம் ஒன்றும் தெரிவிக்கவில்லையே? நான் என்ன கடமைப்பட்டிருக்கிறேன்? எந்த விதத்தில் கடமைப்பட்டிருக்கிறேன்?" என்றான் மதுராந்தகன்.


"மகனே! கேள்! உன் தந்தை சிவபெருமானுடைய பாத மலர்களை அடைந்தபோது நீ சின்னஞ்சிறு பிள்ளை. ஆகையால், உன்னிடம் அவர் ஒன்றும் தெரியப்படுத்த முடியவில்லை. ஆனால் என்னிடம் சொல்லிவிட்டுப் போனார் நாங்கள் மணம் புரிந்த புதிதில் மக்கள் பேற்றை விரும்புவதில்லையென்று முடிவு செய்திருந்தோம். ஆனால் பேதையாகிய என்னால் அந்த மன உறுதியை நிறைவேற்ற முடியவில்லை.

கன்னிப் பருவத்தில் சிவபெருமானிடம் நான் கொண்டிருந்த பக்தி உன் தந்தையிடம் கொண்டிருந்த பிரேமையாக மாறியது. நாளடைவில், என் கையில் ஏந்தி, மார்போடு அணைத்து, மடியில் வைத்துத் தாலாட்டிப் பாராட்டிக் கொஞ்சுவதற்குக் குழந்தை வேண்டும் என்று என் இருதயம் தாபம் கொண்டது. மற்றப் பெண்களின் கையிலும் மடியிலும் குழந்தையைக் கண்டால் என் உடம்பெல்லாம் துடித்து உள்ளம் பற்றி எரிந்தது.

குழந்தைப் பருவத்தில் என்னை ஆட்கொண்ட இறைவனிடம் வரம் கோரினேன். இறைவனும் இந்தப் பேதையின் கோரிக்கையை நிறைவேற்றினார். (தொடரும்)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ்.பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

### திருக்குறளைப் போற்றுவோம்




திருக்குறளைத் தினம் படிப்போர் மனம் வெளுக்கும்
திருக்குறளின் வழிநடப்போர் வாழ்வு இனிக்கும்
அமுதமெனத் திருக்குறளை அள்ளிப் பருகுவோம்
அள்ளிப்பருகி வள்ளுவர்க்கு நன்றி பகருவோம்

வகுப்பறையில் திருக்குறளைச் சொல்லிப்பழகுவோம்
வாழும் வரை பெரும் புகழைப் பெற்று வாழுவோம்
பொதுமறையாம் திருக்குறளை எங்கும் பரப்புவோம்
பொக்கிசமாய்த் திருக்குறளைக் காத்து போற்றுவோம்

திருக்குறளைத் தெய்வக்குரல் என்று சொல்லுவோம்
தெய்வமென வள்ளுவரை வணங்கி மகிழுவோம்
நம்மைக்கற்றுத் தலை நிமிர்ந்து நடந்து காட்டுவோம்
தரணியெங்கும் தமிழ்க்காற்றை சுவாசம் ஆக்குவோம்.

திருவருள்செல்வன் லிஷாந்
தரம் - 12
யா/கனகரத்தினம்
மத்தியமகாவித்தியாலயம்.

## வாசிப்பதால் ஏற்படும் நன்மைகள்



- நாம் புத்தகம், பத்திரிகை என்பவற்றை வாசிப்பதால் நமது வாசிப்புத்திறன் அதிகரிக்கும்.
- நாம் வாசிப்பதால் வாசிப்புத்திறன் மட்டுமன்றி அறிவும் வளர்ச்சியடைகிறது.
- இதனால் நாம் பல்வேறு நாட்டு அரசியல் விளையாட்டுச் செய்திகள் என்பவற்றை அறியலாம்.

ச.மதுஷனன், தரம்-02
யா/ கொக்குவில் இந்து
ஆரம்பப் பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களின் குணங்களின் அனுபவத்தை அதிகப்படுத்தும் எண்ணங்களை செயலில் கொண்டு வாருங்கள். - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## உலக நாடுகளின் வக்கிரத்தால் வதைபடும் மனித சமூகம்

உலக நாடுகளின் அதிகாரப் போட்டி காரணமாக மனித சமூகம் வதைபடுகின்ற பேரவலம் நடந்தாகிறது.

இரண்டாம் உலகப் போரின் பட்டறிவாக, இனிமேல் உலகில் யுத்தம் இடம்பெறுவதை அனுமதிக்க முடியாது என்ற இலக்குடன் ஐக்கிய நாடுகள் சபை ஆரம்பிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கைகள் ஓரளவுக்கு உலக அமைதியை ஏற்படுத்தியதாயினும் சமகாலத்தில் வல்லரசு நாடுகளும் துணை வல்லரசு நாடுகளும் ஐ.நா சபையை இம்மியும் பொருட்படுத்தாதபோது, நாடுகளுக்கிடையே யுத்தம் மூழ்வது சாதாரண மாயிற்று.

ஆம், உக்ரைன் மீது ரஷ்யா நடத்தும் போர் பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிர்களைக் காவு கொண்டன.

அதேபோல் இஸ்ரேலின் கண்மூடித்தனமான தாக்குதல் காஸாவை நிர்மூலமாக்கி, பல்லாயிரக்கணக்கான மனித உயிர்களைப் பலியெடுத்தது.

அதிலும் சிறுவர்கள் கொன்றொழிக்கப்பட்ட சம்பவங்கள் கொடுமையிலும் கொடுமை.

நிலைமை இதுவாக இருக்கையில், இஸ்ரேல் – லெபனான் – ஈரான் என்ற நாடுகளிடையே மூண்டுள்ள போர் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

எங்கே உலகப் போர் மூண்டுவிடுமோ என்ற ஏக்கம் மனித சமூகத்தை பீதி கொள்ள வைத்துள்ளது.

என்ன செய்வது நாடுகளுக்கிடையிலான போரை நிறுத்துகின்ற வல்லமை அமெரிக்காவுக்கு உண்டாயினும் அமெரிக்கா தனக்குச் சார்பான நாடுகளுக்காக வக்காளத்து வாங்க முற்படும்போது, யுத்தம் உக்கிரமடையுமே தவிர அது தணிந்து போகக்கூடிய வாய்ப்பு இல்லை.

ஆக, ஐ.நா சபையாலும் இயலாமல் போக யுத்தத்தில் ஈடுபட்டுள்ள நாடுகளை அதட்டி போரை முடிவுக்குக் கொண்டு வரக்கூடிய வல்லமையுடைய அமெரிக்கா பக்கச்சார்புடன் செயற்பட, தடுப்பாரும் தட்டிக்கேட்பாருமின்றி உலக நாடுகள் யுத்தம் புரிகின்ற நாசகாரத்துக்குள் வீழ்ந்து கிடக்கின்றன.

என்னே கொடுமை! அறிவியலின் உன்னதம், தகவல் தொடர்பாடலின் அபரிதம், விஞ்ஞானத்தின் உச்சம் என விந்தை மிகுந்த உலகம் பாழ்பட்ட யுத்தத்தில் பிரியம் கொண்டு குண்டுகளைக் கொட்டி, ஏவுகணைகளை வீசி, மனித குலத்தை அறுத்துக் கழுவுகிறது.

இதைப் பார்க்கும்போது கடவுளே! உன் அழகிய பூமிப் பந்தில் இத்துணை வக்கிரம் கொண்ட ஆட்சித் தலைவர்களா? மனித உயிர்கள் மீது அவர்களுக்கு இத்துணை வெறுப்பா? என்றெல்லாம் எண்ணத் தோன்றும்.

ஓ! இறைவா போரில் ஈடுபட்டு மனித குலத்தை அழிக்க நினைக்கின்ற கொடியவர்களை அழித்து மனித சமூகத்தை காத்தருள். அதுவே உம்மிடமான நம் வேண்டுதல்.

# தனியார் போக்குவரத்து சபையினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக

## வடக்கு ஆளுநர் தலைமையில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தனியார் போக்குவரத்துச் சபையினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக வடக்கு ஆளுநர் தலைமையில் நேற்று கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஆளுநர் செயலகத்தில் மாகாண வீதி பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினருக்கும் , வடக்கு மாகாண தனியார் போக்குவரத்து சபையினருக்கும் இடையிலான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று காலை (03.10.2024) இடம் பெற்றது.

இதன்போது தனியார் போக்குவரத்து சபையினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டதோடு தனியார் பஸ் நிலையம், பஸ் தரிப்பிடங்களில் காணப்படும் வசதி வாய்ப்புகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. மேலும் அரச போக்குவரத்து மற்றும் தனியார் போக்குவரத்து சபை இரண்டுக்கும் இடையிலான நேரக் கட்டுப்பாடுகள், நேர அட்டவணைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

தனியார் போக்குவரத்து சங்கங்களுக்கு இடையில் பின்பற்றப்படும் நடைமுறைகளை புதிதாக சங்கங்களில் இணைந்து கொண்டவர்கள் மீறுவதால் பல பிரச்சினைகள் ஏற்படுவதாகவும் பயணிகள் பல இடையூறுகளை எதிர்நோக்குவதாகவும் தெரிவித்தனர். இதன்போது தனியார் போக்குவரத்து சங்கங்களில் பணிபுரிபவர்களின் ஒழுக்கம் மற்றும் அவர்களது ஆடை தொடர்பாக கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

பாதை வழித்தட உரிமத்தின் பிரகாரம் பாதை வழித்தடம் சரியாகப் பின்பற்றப்படாமை, நடைமுறைப்படுத்தப்படாமை தொடர்பாகவும் ஆளுநரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. தனியார் பஸ் உரிமையாளர்களின் வாழ்வாதாரம் தொடர்பாக எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி விடயங்கள் தொடர்பில் பரிசீலனை மேற்கொண்டு மாகாண வீதிப்போக்குவரத்து அதிகார சபை இவை தொடர்பான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளுமாறும் வடக்கு மாகாண தனியார் போக்குவரத்து சபைக்கு இடையிலான தொடர்பையும் சரியாக பேணுமாறும் அவர்களுக்கு உரிய பதிலை விரைவாக வழங்க வேண்டும் எனவும் ஆளுநர் தெரிவித்தார்.

அத்துடன் இவ் விடயங்களை நடைமுறைப்படுத்தும் பொழுது எழும் பிரச்சினைகளை சரியான விதத்தில் ஆராயப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். (ம-7,33)

# யாழ்.பல்கலையில் மொழிபெயர்ப்பு தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மொழிபெயர்ப்புக் கற்கைகள் துறையின் ஏற்பாட்டில் மொழிபெயர்ப்புத் தினக் கொண்டாட்டங்கள் இடம்பெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை 4ஆம் திகதி முற்பகல் 8 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணி வரை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் குறித்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, சிறப்பு விருந்தினராக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ரகுராம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

முற்பகல் 8 மணிக்கு கண்காட்சியும், பிற்பகல் 1.30 மணியளவில் சஞ்சிகை வெளியீடும், பிற்பகல் 4 மணியளவில் கலாசார நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ம-7)

# யாழில் ஒரு கோடியே 5 லட்சம் ரூபாய் வழிப்பறி

## இரு சந்தேகநபர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தனது காணியை விற்ற பணம் ஒரு கோடியே 5 இலட்சம் ரூபாய் பணத்துடன் வீடு திரும்பிக் கொண்டிருந்த நபரை தாக்கி விட்டு பணத்தை இருவர் கொள்ளையடித்து சென்ற குற்றச்சாட்டில் இரு சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வெளிநாட்டில் வசித்து வரும் சங்குவேலியைச் சேர்ந்த ஒருவர் அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவர் நேற்று முன்தினம் புதன்கிழமை தனது காணியை விற்ற பணத்துடன் வீடு திரும்பிக்கொண்டிருந்த வேளை, மோட்டார் சைக்கிள் ஒன்றில் பின்தொடர்ந்து வந்த இருவர் அவரை வீதியில் வழிமறித்து அவரை தாக்கி விட்டு பணம் , கடவுச்சீட்டு, இலட்ச ரூபாய் பெறுமதியான கையடக்க தொலைபேசி என்பவற்றை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

பணத்தினை பறிகொடுத்தவர், மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

அதன் அடிப்படையில், சந்தேகநபர்கள் ஊரெழு பகுதியில் மறைந்திருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் , சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் இருவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட பணம், கையடக்கத் தொலைபேசி உள்ளிட்டவற்றையும் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் இருவரையும் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,33)

# மன்னார் நீதிபதிக்கு எதிராக அவதூறு சுவரொட்டிகள்

## மேலும் இருவர் கைது

மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதிக்கு அவதூறு ஏற்படுத்தி சுவரொட்டிகளை ஒட்டிய சம்பவம் தொடர்பில் மேலும் இரு சந்தேகநபர்கள்கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் அதிகாரிகள் குழுவினால் களனி மற்றும் தெஹிவளை பகுதிகளில் வைத்து சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்த 03 கையடக்கத் தொலைபேசிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 27 மற்றும் 41 வயதுடைய அம்பகோட்டே மற்றும் தெஹிவளை பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

சந்தேகநபர்கள் அதற்கான சுவரொட்டிகளை உருவாக்கி அச்சிட்டு வைத்திருந்ததாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 28ஆம் திகதி மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதியின் புகைப்படத்தை உள்ளடக்கி அவரை அவமதிக்கும் வகையில் சிலர் கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் விளம்பரம் செய்தமை தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

சம்பவம் தொடர்பில் கடந்த செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி மடபாத, மாத்தளை மற்றும் பன்னிபிட்டிய பிரதேசங்களைச் சேர்ந்த மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சில நாடுகளின் சமஷ்டி அரசியல் முறைமையும் இலங்கையின் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தமும்

## ஒரு பார்வை

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

24

மாகாணசபைக்கு ஒதுக்கப்பட்ட விடயங்கள் கூட அரைகுறையாகவே வழங்கப்பட்டுள்ளன. உதாரணமாக சுகாதாரம் மாகாணசபை நிரலிற்குள் உள்ளடக்கப்பட்டாலும் போதனா வைத்தியசாலைகள் மத்தியின் கட்டுப்பாட்டிற்குள்ளேயே இயங்கும். மருந்துகளை வாங்கும் அதிகாரமும் மத்திக்கே உரியதாகும்.

பாடசாலைகள் மாகாணசபை நிரலிற்குள் உள்ளடக்கப்பட்டாலும் தேசிய பாடசாலைகள் தொடர்ந்தும் மத்திய அரசாங்கத்தினாலேயே பரிபாலிக்கப்படும். மாகாணசபைக்கு குறித்தொதுக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் மாகாணசபை 'பாராளுமன்றத்தினால் சட்டமொன்றின் மூலமாக வழங்கப்படும் கட்டுப்பாடுகளிற்கு உட்பட்டு' சட்டமியற்றலாம் என்ற வாசகம் பரவலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

உதாரணமாக கடன் வாங்குதல், சூழல் பராமரிப்பு, கனியவள விருத்தி, (பெரும்பாலான, முக்கியமான) வரி விதிப்பு. ஆகவே இவை 'மாகாண விடயங்களாக' இருந்தாலும் இவை தொடர்பில் பாராளுமன்றம் சட்டவாக்கம் செய்யலாம்.

**மத்திய அரசாங்கப் பட்டியல் (16 விடயங்களுடாக) நிரல் II**

- நாட்டின் கிராம அபிவிருத்தி பாதுகாப்புக்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகள் (முப்படை, தேசிய பொலிஸ்படை)
- தபால், தந்திப்போக்குவரத்து, வானொலி, தொலைக்காட்சி
- நீதிமன்ற நடவடிக்கைகள், உயர் நீதிமன்றம், மேல்முறையீட்டு நீதிமன்றம்
- தேசிய வளங்கள் நிதி நடவடிக்கைகள் வெளிநாட்டு வளங்கள் தொடர்பானவை
- வெளிநாட்டு வியாபாரம், மாகாணங்களுக்கிடையிலான வர்த்தக நடவடிக்கைகள்
- துறைமுகம், கப்பற் போக்குவரத்து, கடற்போக்குவரத்து நடவடிக்கைகள்
- விமான போக்குவரத்து விமான நிலையங்கள் தொடர்பான நடவடிக்கைகள்
- தேசிய போக்குவரத்து
- ஆறுகள் நீர்நிலைகள், தொடர்பான நடவடிக்கைகள்
- காணி வளங்கள், சுரங்க நடவடிக்கைகள்
- குடிவரவு, குடியகல்வு பிரசாவுரிமை, தொடர்பான நடவடிக்கைகள்
- தேர்தல் நடவடிக்கைகள்
- குடிசன மதிப்பு நடவடிக்கைகள்
- தேசிய வடிகாலமைப்பு தொடர்பான நடவடிக்கைகள்
- தேசிய அளவை, நிறுவை தொடர்பான நடவடிக்கைகள்
- மாகாணங்களுக்கிடையிலான குடி நகர்வு தொடர்பான நடவடிக்கைகள்
- தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கைகள் இதில் சுருக்கமாக காட்டப்பட்டுள்ளன.

### மூன்று நிரல்களின் ஒப்பீடு

இந்த மூன்று நிரல்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது மாகாணசபை நிரலில் மட்டும் காணப்படும் விடயங்கள் கீழே தரப்படுகின்றன. மாகாணசபை நிரலில் (நிரல்-1) மட்டும் காணப்படும் விடயங்கள். விடய இலக்கம்/ பந்தி இலக்கம் அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளன.

### பொதுசேவைகள் (General Public Services)

● போதையூட்டும் மதுபானங்களை உடைமையில் வைத்திருத்தலும் இடம் பெயர்த்தலும் கொள்வனவு செய்தலும் விற்பனை செய்தலும். (நிரல் 1, பந்தி 23)

● மாகாணக்கடன் (நிரல் 1, பந்தி 31)

### பொருளாதார சேவைகள் (Economic Services)

● மாகாணத்தினுள் வீதிப் பயணிகள் வண்டிச் சேவைகளையும் மோட்டார் வாகனங்களின் மூலம் பண்டங்களை ஏற்றிச்செல்வதையும் ஒழுங்குபடுத்தலும் மாகாணங்களுக்கு இடையேயான வீதிப்போக்குவரத்துச் சேவைகளை ஏற்பாடு செய்தலும். (நிரல் 1, பந்தி 8)

● கிராமிய அபிவிருத்தி (நிரல் 1, பந்தி 10)

● வாடி வீடுகள் மற்றும் சுற்றுலா விடுதிகள் பராமரிப்பு (நிரல் 1, பந்தி 13)

● வங்கிகளினால் கொண்டு நடாத்தப்படும் அடைவு பிடிப்போர் தொழில் அல்லாத அடைவு பிடிப்போர். (நிரல் 1, பந்தி 14)

● சந்தைகள், முறைச்சந்தைகள் ( நிரல் 1, பந்தி 15)

● மாகாணத்தினுள் உணவு வழங்கலும் விநியோகித்தலும் (நிரல் 1, பந்தி 16)

● கூட்டுறவுகள்-(நிரல் 1, பந்தி 17, 17:1, 17:2, 17:3, 17:4)

▸ மாகாணத்தினுள் கூட்டுறவு பொறுப்பு முயற்சிகளும் கூட்டுறவுச் சங்கங்களை ஒழுங்குபடுத்தலும் பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும் கணக்காய்வு செய்தலும்.

▸ கூட்டுறவுக் கல்வியும் பிரசாரமும் உட்பட மாகாணத்தினுள் கூட்டுறவு அபிவிருத்தி.

▸ மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு

▸ மாகாண கூட்டுறவுச்சங்க ஊழியர்களைத் தொழிலுக்கமர்த்துதல், அவர்களின் பதவியுயர்வு, ஓய்வு பெறுகை சம்பந்தமான கருமங்களும் அத்துடன் வேறு சம்பந்தப்பட்ட கருமங்களும்.

● தேசிய ஞாபகார்த்த மயானங்களெனப் பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் வெளிப்படுத்தப்பட்டவை தவிர, புதைத்தல்களும் இடுகாடுகளும், தகனங்களும், சுடுகாடுகளும். (நிரல் 1, பந்தி 24)

● கூட்டிணைக்கப்படாத வியாபார, இலக்கிய, விஞ்ஞான, சமய, அத்துடன் வேறு சங்கங்களையும் கழகங்களையும் ஒழுங்குபடுத்துதல் (நிரல் 1, பந்தி 28)

● பந்தயம் மற்றும் சூதாட்டம் (அனுமதிப்பத்திர கட்டணம் மற்றும் வரி தவிர (நிரல் 1, பந்தி 30)

● ஏதேனும் நீதிமன்றத்தில் எடுக்கப்படும் கட்டணங்கள் நீங்கலாக மாகாண நிரலிலுள்ள கருமங்களுள் எது தொடர்பிலுமான கட்டணங்கள். (நிரல் 1, பந்தி 33)

● பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு பணம் கடன் பெறல். (நிரல் 1, பந்தி 35)

● பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு வரி அறவிடல் (நிரல் 1, பந்தி 36)

### மனித வள மேம்பாடு மற்றும் சமூக பாதுகாப்பு (Human resources development and social protection)

● சுதேச வைத்தியம் (நிரல் 1, பந்தி 12)

● சீர்திருத்தும் நிலையங்களும் சிறுவர் நன்னடத்தை நிறுவனங்களும் (நிரல் 1, பந்தி 22)

### பொழுதுபோக்கு, கலாசாரம் மற்றும் மதம் (Recreation Culture and Religion)

● திரையிடப்படுவதற்கும் பகிரங்க அரங்காட்டுகளுக்குமான திரைப்படச் சுருள்களை அனுமதித்தல் நீங்கலாக, படமாளிகைகள், நாடக அரங்காட்டுகள், சங்கீதம், திரைப்படம், களியாட்டங்கள் அத்துடன் பொழுதுபோக்குகள். (நிரல் 1, பந்தி 29:1)

மேற்கூறப்பட்ட விடயங்கள் மட்டுமே மாகாண சபை நிரலில் மற்றைய இரு நிரல்களுடனும் தொடர்புபடாமல் உள்ளன. எனவே இவ் விடயங்கள் சம்பந்தமாக மாகாண சபையால் இலகுவாக தேவையான நியதிச் சட்டங்களை ஆக்கிக்கொள்ளமுடியும். பொதுச்சேவைகள், பொருளாதார சேவைகள், மனித வள மேம்பாடு மற்றும் சமூகப் பாதுகாப்பு, மற்றும் பொழுதுபோக்கு, கலாசாரம் மற்றும் மதம் ஆகிய விடயங்களின் ஒரு சில பகுதிகளுக்கு மட்டுமே மாகாண சபைக்கு அதிகாரம் காணப்படுகிறது. இவ்விடயங்களைப் பார்க்கும் போது மாகாண சபைக்கு அதிகாரப் பகிர்வு கொடுக்கப்பட்டுள்ளாத என்பது தெரிய வில்லை.

மாகாண சபை நிரலில் மொத்தமாக 37 விடயங்கள் காணப்பட்டாலும் மேற்கூறப்பட்ட 18 விடயங்களுக்கு மட்டுமே இலகுவாக நியதிச் சட்டங்களை ஆக்க முடியும் மிகுதி 19 விடயங்களும் ஏதாவதொரு வடிவத்தில் மத்திய அரசாங்கத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள (16 விடயங்களுள்) ஒதுக்கிய நிரலுள் அல்லது ஒருங்கிணைந்த நிரலுள் (36 விடயங்களுள்) தொடர்புபட்டு காணப்படுகின்றன.

எனவே இந்த 19 (மாகாண சபை நிரலிலுள்ள) விடயங்கள் சம்பந்தமாக நியதிச் சட்டங்களை ஆக்குவது ஒரு மாகாணசபைக்கு இலகுவான காரியமல்ல. இவ் விடயங்கள் சம்பந்தமான நியதிச் சட்டங்களை ஆக்குவதற்கு பாராளுமன்றத்தின் அனுமதிபெற வேண்டியேற்படும்.

"இங்கு சிக்கலான காரணி என்னவெனில் மத்திய மற்றும் மாகாணங்களின் இயலுமைகள் குறித்த நியாயமான எல்லைகளைத் தீர்மானிப்பதானது அச்சொட்டற்றதாக இருப்பதும் அநேகமாக 3 நிரல்களிலும் விடயங்கள் பங்கிடப்பட்ட விதம் முரண்பாடாக இருப்பதும் ஆகும்.

உண்மையிலே பல்வேறுமட்ட அரசாங்கங்களுக்கிடையிலான இயலுமைகளின் நிரலை வடிவமைப்பதில் எல்லா சந்தேகங்களையும் நீக்குவது சாத்தியமானதல்ல. அதிகாரப் பங்கீடு செய்யப்பட்ட முறைமைகளை நடைமுறைப்படுத்துவதில் இயலுமைகள் குறித்த இவ்வாறான பிணக்குகள் எழுவது இயற்கையே.

முதல் கட்டத்திலேயே நிர்வாகச் செயன்முறைகளின் ஊடாக வேண்டிய தீர்மானங்களை உருவாக்கி அவைகளை நீதிமன்றங்கள் ஊடாக இறுதிப்படுத்த வேண்டும். ஆனாலும் 9 ஆம் நிரல்களின் 3 நிரல்களின் வடிவமைப்பானது தெளிவு மற்றும் நுணுக்கத்தன்மை விடயங்களில் நிறையவே செய்ய வேண்டியதாக சொல்லப்படுகிறது.

விளைவு என்னவெனில் அநேகமாக நீதிமன்றமானது பிரச்சினைகளைத் தீர்க்கும் பொழுது சௌகரியமாக மத்திக்கு சார்பாக தீர்மானம் எடுக்கச் சொல்ல வழிவகுக்கிறது.

மாகாணசபை நிரல் 1 ஆனது 37 விடயங்களை பிரித்துக் கூறுகிறது. அவற்றுள் பலவற்றுக்கு உப விடயங்கள் கொடுக்கப்பட்டு அவ் விடயங்களின் வீச்சுக்களும் எல்லைகளும் குறித்துரைக்கப்படுகிறது. மாகாணசபைகள் மீது பகிரப்பட்ட சட்டவாக்க நிறைவேற்று அதிகாரங்களை இவைகள் தருகின்றன.

3 முக்கிய விடயங்கள் மேலும் 3 பின்னிணைப்புகளாக மாகாணசபை நிரலின் ஒரு பகுதியாக விபரமாகத் தரப்படுகின்றன. அவை சட்டமும் ஒழுங்கும் (பின்னிணைப்பு 1) காணிக்குடியமர்வும் (பின்னிணைப்பு 2), கல்வி (பின்னிணைப்பு 3). காணி மீதான அதிகாரம் பொலிஸ் என்பனவாகும்.

இவை தமிழ் தேசியவாதிகளால் குறிப்பாக முக்கியமான இயல்புடையனவாகக் காட்டப்பட்டு வடக்கு, கிழக்குப் பகுதிகளில் சுய ஆட்சி கோரப்பட்டிருந்தது.

நாட்டின் எல்லா இடங்களிலும் மாகாணசபை தொழிற்பாட்டை 20 வருடங்களாகக் கொண்டிருந்த அனுபவத்தில் பொலிஸ், காணி, நிதி மற்றும் சுகாதாரம், கல்வி மற்றும் கமநல சேவைகள் விடயங்களை அமுல்படுத்துவதில் முழு சுயாதிக்கம் விரும்பப்படுவது தெளிவாகிறது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்திய வங்கி...

வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க வர்த்தமானியில் அறிவித்துள்ளார்.

மேலும் 11.09.2024 இற்குப் பின்னர் ஓய்வூதியக் கொடுப்பனவுகளுக்கான கோரிக்கைகள் எதுவும் இலங்கை மத்திய வங்கியால் ஏற்றுக்கொள்ளப் படாது எனவும் தெரிவிக்கப்பட்டுள் ளது. (ம-7)

## திங்கட்கிழமை...

யாக அலுவலக நேரங்களில் கலந்து ரையாடுவதற்காக ஏற்கெனவே பொது மக்கள் தினமாக இருந்த புதன் கிழமைக்குப் பதிலாக திங்கட்கிழமை யினை பொதுமக்கள் தினமாக மாற்றி யுள்ளதாக வடமாகாண ஆளுநர் செய லகத்தினால் பொதுமக்களுக்கு அறி வித்தல் வழங்கப்பட்டுள்ளது.

(ம-7,33)

## விசுவமடுவில்...

யினைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான இராசேந்திரம் கௌதமன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

கண்ணகி நகர்ப் பகுதியில் இருந்து தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ஊழியர் களை ஏற்றிச்சென்ற பேருந்துடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையில், விபத்தில் காய மடைந்த குடும்பஸ்தரை தருமபுரம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப் பட்டபோது உயிரிழந்துள்ளார். (ம-7,316)

## தனியார்...

ஒருவர் நேற்று மாலை சடலமாக மீட் கப்பட்டுள்ளார்.

ஈச்சமோட்டை வீதி, சுண்டுக்குளிப் பகுதியைச் சேர்ந்த மைக்கல் அன்ரன் சுரேந்திரன் (வயது-70) என்பவரே இவ் வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபரின் மனைவி லண்டனி லும், பிள்ளைகள் கொழும்பிலும் வசித்து வருகின்றனர். இவர் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் கட்டாரில் இருந்து வந்து சகோதரியின் வீட்டில் வசித்து வருகிறார்.

இருப்பினும் கடந்த வாரங்களாக அவர் குறித்த விடுதியில் தங்கியிருந் துள்ளார். அவரைக் கைபேசியில் அழைத்த நண்பர் அவரைத் தொடர்பு கொள்ள முடியாத காரணத்தால் நேற்று மாலை குறித்த விடுதிக்குச் சென்று அறைக் கதவினைத் திறந்து பார்த்தவேளை அவர் தூக்கில் தொங்கியவாறு காணப்பட்டார்.

அவர் இரண்டு தினங்களுக்கு முன் னர் இறந்திருக்கலாம் என சந்தேகிக் கப்படுகிறது. அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபால சிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. (ம-7)

## மக்கள்...

கைக்கான இணைப்பாளர் மார்க் அண்ட்ரூ பிரான்ஸ் நேற்று வியாழக் கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது ஐ.நா பொதுச் செய லாளர் அன்டோனியா குட்டாரஸின் வாழ்த்துச் செய்தியை ஐக்கிய நாடுகள் அமைப்பின் வதிவிட இணைப்பாளர், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க விடம் வழங்கி வைத்தார்.

மக்கள் எதிர்பார்ப்புக்கள் அதிகள வில் காணப்படுவதால் எதிர்வரும் காலம் சவாலானதாக அமையுமென சுட்டிக்காட்டிய ஐ.நா.இணைப்பாளர் சர்வதேச நாணய நிதியத்துடனான இலங்கையின் வேலைத்திட்டம் மற்றும் வறுமை ஒழிப்பு முயற்சிகளுக்கு ஐ.நா ஒத்துழைப்பு வழங்குமெனவும் உறுதியளித்தார்.

ஜனாதிபதியின் தேர்தல் விஞ்ஞா பனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஊழல் ஒழிப்புத் திட்டத்துக்கு பாராட்டுத் தெரிவித்த மார்க் அண்ட்ரூ, அந்த முயற்சிகளுக்கு ஐ.நா தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகளை வழங்குமென வும் உறுதியளித்தார். (ம-7)

## அடிமையான...

குறித்த மாணவன் free fire என்ற கைபேசி கேமிற்கு அடிமையாகிய நிலையில் கடந்த 3 மாதங்களாக பாட சாலைக்கும் செல்லவில்லை. கிராம சேவகர், அதிபர், ஆசிரியர்கள், பிர தேச செயலக உத்தியோகத்தர்கள் வந்து, பாடசாலைக்கு வருமாறு கோரி யும் பாடசாலைக்குச் செல்லவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் குறித்த மாணவனின் கைபேசியினை தந்தை பறித்துள்ளார். இதனால் குறித்த மாணவன் 25.09.2024 அன்று வீட்டினை விட்டு வெளியேறிச் சென்றுள்ளான். இது குறித்து பெற் றோர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலை யத்திலும் முறைப்பாடு பதிவு செய்தனர்.

குறித்த மாணவன் பரந்தனில் உள்ள தமது வீட்டில் நின்றதாகக் கூறி உறவினர் ஒருவர் அவனை நேற்று முன்தினம் இரவு வீட்டிற்கு அழைத்து வந்து பெற்றோருடன் சேர்ப்பித்தார். அந்த மாணவன் நேற்று அதிகாலை 2 மணிவரை குறித்த கேமினை விளை யாடிவிட்டு வீட்டிற்கு அருகேயுள்ள காணியில் தூக்கிட்டு உயிர்மாய்த் துள்ளான்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெய பாலசிங்கம் மேற்கொண்டார். உடற் கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக் கப்பட்டது. (ம-7)

## வேட்புமனுத்...

எதிர்வரும் பாராளுமன்றத் தேர் தலுக்காக இதுவரை 58 சுயேட்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள் ளன.

மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திகாமடுல்ல மற் றும் கொழும்பு ஆகிய மாவட்டங் களில் இருந்து அதிகளவான சுயேட்சைக்குழுக் கள் இவ்வாறு கட்டுப்பணத்தினை வைப்பிலிட்டுள்ள தாகத் தெரிவிக் கப்படுகிறது.(ம-7)

## நிவா...

வற்வரி வரு மானத்தை மக் களுக்கு நிவா ரணமாக வழங்க அரசாங்கம் திட்ட மிட்டுள்ளது என சர்வதேச நாணய நிதியத்தின் அதி காரிகளிடம் ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க தெரிவித் துள்ளார்.

ஐ.எம்.எப் பிரதி நிதி களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நேற் றுச் சந்திப்பொன்று இடம்பெற்றுள் ளது.

குறித்த சந்திப் பில் பொருளா தார ரீதியில்நெருக் கடிகளை சந் தித்துவரும் மக் களிற்கு வரி நிவாரணங்களை வழங்கவுள்ள தாக ஐ.எம்.எப் பிரதி நிதிகளிடம் ஜனாதிபதி தெரி வித்தார்.

சர்வதேச நாண யத்தின் திட்டத்தில் ஏற்பட்டுள்ள முன் னேற்றங்கள் குறித்து ஜனாதிபதி சர்வ தேச நாணயநிதியத்தின் அதிகாரிகளு டனான சந்திப்பில் ஆராய்ந்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்தின் திட் டத்தின் நோக்கங்கள் குறித்த கொள்கை யளவிலான அரசாங்கத்தின் பரந்து பட்ட உடன்பாட்டை மீள வலியுறுத்தி யுள்ள ஜனாதிபதி இந்த நோக்கங் களை மக்களின் சுமைகளை குறைக் கும் மாற்றுவழிகள் ஊடாக அடைய வேண்டிய தேவையை வலியுறுத்தியுள் ளார். (ம-7)

## குளவிக்கொட்டு 15 தொழிலாளர்கள் வைத்தியசாலையில்

(கொழும்பு)

தலவாக்கலை, அக்கரபத்தன எல்பியன் தோட்டத்தில் நியூபிரஸ்டன் பிரிவில் குளவிக்கொட்டுக்கு இலக்கான நிலையில் 15 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை காலை குறித்த பெண் தோட்டத் தொழிலாளர் கள் தேயிலைக் கொழுந்து பறித்துக் கொண்டிருந்தபோதே திடீரெனக் கலைந்து வந்த குளவிகள் தாக்கியுள் ளன. (ம-7)




























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DCM யாழ் நகர்

வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை

## A/L 2026

கலை, வர்த்தகப் புதிய பிரிவு

நாளை 05.10.2024 சனி காலை 8.00மணி

நிர்வாகம் : 077 7789815

(2192)

## யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்

யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள் 36,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஒரு வருட E-Visa இனை 9000/= ரூபாவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

(395)

## APEX TRAVELS

0777 597 598, 076 3333 644

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

## கணக்கீடு

வடக்கின் முதற்தர கணக்கீட்டு ஆசிரியர்
திரு.க.பா.பாலகஜன்(SLTS)

KBK ACCOUNTING

KBK- கந்தர்மடம் (பலாலி வீதி)
தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம்

### A/L 2026 புதிய பிரிவுகள்

| | |
|---|---|
| தமிழ் மொழி மூலம் | திங்கள் - 04.30-05.30pm<br>புதன் - 04.30-06.00pm |
| English Medium | Mon - 05.30 - 06.45pm<br>Wed - 03.00 - 04.30pm |

ஆரம்பம் : 07.10.2024 திங்கள் மாலை 4.30

A/L 2025 மாணவர்களுக்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

(C-1334)

077 452 0043

## விசேட விலைக் கழிவு — MARD — வெள்ளிக்கிழமை 04.10.2024

| | | | |
|---|---|---|---|
| Rs. 229.00 Bulk Max 2kg வெள்ளைச் சீனி | Rs. 159.00 Bulk Max 2kg கோதுமை மா | Rs.379 மஞ்சள் பருப்பு | Rs. 749.00 Bulk செத்தல் மிளகாய் |
| Rs. 999.00 Anchor 400g | Rs.249.00 ~~300~~ Fems 8 Pcs | Rs. 59.00 ~~80~~ Anchor Yoghurt | Rs. 1799.00 ~~2000~~ Protinex |
| Rs. 339.00 ~~425~~ Vim Liquid | Rs. 2589.00 ~~3000~~ Vitagen Vannila | Rs. 299.00 ~~380~~ Sunlight Powder Rose | Rs. 1129.00 ~~1180~~ Anchor Plus |
| Rs. 149.00 ~~175~~ Santoor Soap | Rs. 439.00 ~~480~~ Chick Shampoo | Rs. 2999.00 ~~3385~~ Diabeta Plus | Rs. 379.00 ~~500~~ Ocean Star Mackerel |
| Rs. 919.00 5kg ~~1150~~ Prima Wheat Flour | Rs. 3499.00 ~~3900~~ Sustagen 400g | Rs. 149.00 ~~200~~ Noodles | Rs. 349.00 ~~400~~ Pepsi 1.5L |

(C-1328)

Call For Information 074 1011 345

மருதனார்மடம் (யாழ். இராமநாதன் கல்லூரிக்கு முன்பாகவும் வட இலங்கை சங்கீத சபைக்கு அருகிலும்) 138, கே.கே.எஸ். வீதி.

## பொருளியல் கருத்தரங்கு

### A/L 2024

வளவாளர் : S.JEYAKUMAR
B.A(Hons) Econ spl, M.A in Econ(Pera) P.G.D.E

- பரீட்சை எதிர்பார்ப்பு வினா விடைகள்
- புள்ளித்திட்ட விளக்கம்
- தேர்ச்சி அடிப்படையிலான மீட்டல்
- கையேடுகள் வழங்கப்படும்
- 40 மணித்தியாலங்கள் நடைபெறும்

ஆரம்பம் : 06.10.2024 ஞாயிறு 2.00 மணி

இடம் : NEW SCIENCE HALL, JAFFNA

- வெளி மாணவர்களும் பங்குபற்ற முடியும்.
- வெளி மாவட்ட மாணவர்களுக்கு zoom செயலி மூலம் நடைபெறும்

(2197)

077 723 8597/076 535 0999/077 778 9815

## K.P.C

இருபாலை வீதி, கோண்டாவில்

### A/L 2026

வர்த்தகத்துறைக்குரிய புதிய பிரிவு ஆரம்பம்

05.10.2024

சனிக்கிழமை 3.00pm

| | |
|---|---|
| பொருளியல் | S.JEYAKUMAR |
| கணக்கீடு | A.T.SUREN |
| வணிகக்கல்வி | T.S.RICHI |

(2197)

077 723 8597

## புத்தம் புதிய வெளியீடு!

### LOGIC

பாடத்திற்கான விஞ்ஞானமுறை

வினா - விடை அமைப்பில்

எஸ்.எஸ்.மனோகரன்

(2185)

## கணக்கீடு

### A/L 2026

புதிய பிரிவு ஆரம்பம் சனி 9A.m

A/L 2025 Paper Class

ஆரம்பம் திங்கள் 3 P.m

S.தவா
B.Com(Hons)(Acc spl) PGDE M.A in Edu (Hons)

DCM யாழ்.நகர்
யா/வேம்படி மகளிர் கல்லூரி அருகில்
077 239 5858

(2204)

## யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்

இன்றுமுதல் (04.10.2024) தீபாவளி தினம் வரை

### இந்தியன் செலக்‌ஷனின்

பிரமாண்டமான

### தீபாவளி

ஜவுளிக் கொண்டாட்டம்

SPECIAL OFFER!



சாறி OFFER விசேட விலைக் கழிவு

| | |
|---|---|
| ~~1500/=~~ | 1000/= |
| ~~3000/=~~ | 2000/= |
| ~~3500/=~~ | 2500/= |
| ~~5000/=~~ | 2800/= |
| ~~6000/=~~ | 4000/= |

நூற்றுக்கணக்கான டிசைன்களில் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள், லெஹங்கா, டொப், பார்ட்டி புறொக் என ஏராளமான ஆடைத்தெரிவுகள்

இம்முறையும் தீபாவளியை இந்தியன் செலக்‌ஷனுடன் கொண்டாடுங்கள்

காலம் : 04.10.2024 - தீபாவளி தினம் வரை

இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.

(வாரத்தின் 07 நாட்களும் திறந்திருக்கும்)

(2202)

## Vacancies

Manager, Data Entry, Technician, Online customer service Executive, Accountant, Tele calling, Voice Artist, News Reader, Web Developer, Software Developer, IT Admin, Office Admin, Supervisor, Sales Executive, Sales Manager, Digital Marketing Executive, Receptionist, Assistant Manager.

(2193)

077 773 3368, 074 162 1632


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.